AHARAM

# அகரம்

தரம் 5 - 11 வரை எண்: 10 எழுத்து: 10 ஒக்டோபர் - 2016 www.aharam.lk



## மிதக்க வைக்கும் சாக்கடல்

“உலகிலேயே மிகவும் தாழ்வான பகுதி
சாக்கடல் பகுதிதான் என்பது
நவீன தொழிநுட்பக் கருவிகளின்
துணையுடன்தான்
அண்மைக் காலங்களில் கண்டறியப்பட்டது.
ஆனால், இத்தகைய தொழிநுட்ப முறைமைகள்
இல்லாத அன்றைய காலத்தில்
அல்குர்ஆன் இதனைத் துல்லியமாகக்
கூறியிருப்பது அல்குர்ஆன் ஓர்
இறைவேதம் என்பதற்கு சான்றாகும்.”

50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ENGLISH MEDIUM

## Grade 6, 7, 8, 9, 10, 11

## PROJECT BATCH

- Maths
- English
- History
- H.P.E
- Science
- English. Lit
- Citizenship
- Geography

Hurry for your Place

With the help of well experienced panel of teachers individual attention will be given.

# TAMIL MEDIUM

## தரம் 6, 7, 8, 9, 10, 11

## PROJECT BATCH

மாணவர்களுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

**கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், வரலாறு**

ஒவ்வொரு மாணவரும் தனிப்பட்டமுறையில் கவனிக்கப்பட்டு கற்பிக்கப்படுவர்.

**கடந்த பல வருடங்களாக அனேக மாணவர்களின் "A" சித்திகளுக்கு வழிகாட்டி சாதனைகள் படைத்த ஆசிரியர்களின் வழிகாட்டல்களில் நீங்களும் பயனடையத் தவறாதீர்கள்.**


சிறந்த ஒழுக்க பண்பாடுள்ள கற்க ஆர்வமுள்ள மாணவர்களின் கல்வி நிலையம்

NEWMAN'S COLLEGE

Mawanella 035-3354625


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06



உலகிலேயே மிகவும் தாழ்வான பகுதி சாக்கடல் பகுதிதான் என்பது நவீன தொழிநுட்பக் கருவிகள், அளவை முறைகள், புவியியல் ஆய்வு முறைகள் என்பவற்றின் துணையுடன்தான் அண்மைக் காலங்களில் கண்டறியப்பட்டது. ஆனால், இத்தகைய தொழிநுட்ப, அளவையியல் முறைமைகள் இல்லாத அன்றைய காலத்தில் அல்குர்ஆன் இதனைத் துல்லியமாகக் கூறியிருப்பது அல்குர்ஆன் ஓர் இறைவேதம் என்பதற்கு சான்றாகும்.


22




24



38



32



AHARAM அகரம்

எண்: 10 - ஒக்டோபர் : 2016 - எழுத்து: 10




பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

ஆலோசனைக் குழு

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர்

துணை ஆசிரியர்
வ. முஹம்மத் நபீல்

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

## பாடத்திட்டம்

| | |
|---|---|
| புலமைப்பரிசில் | 40 |
| அரபு மொழி | 14 |
| வரலாறு | 20 |




36

தொடர்புகளுக்கு:

அகரம்
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை
கொழும்பு 00900
தொ.பே : 077 741 2561
பெக்ஸ் : 011 268 6030
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com

சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடன் ஆசிரியர்...

# வாழ்வின் வழிகாட்டிகளை வாழ்த்துவோம்!

''கற்பவனாக இரு அல்லது கற்றுக் கொடுப்பவனாக இரு அல்லது கல்விக்கு உதவி செய்பவனாக இரு'' என்பது அண்ணலாரின் வைர வாசகம்! இத்தகைய உன்னத கல்விக்கு உயிர் நாடியாகத் திகழ்பவர்கள் ஆசிரியர்கள்! ஆசிரியர்கள் கற்கிறார்கள்; கற்றுக் கொடுக்கிறார்கள்; கற்பதற்கு துணையும் புரிகிறார்கள்.

அகல விரிந்த அகிலத்தை நமக்கு அறிமுகம் செய்யும் ஆசான்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள்; போற்றப்பட வேண்டியவர்கள். இதனால்தான் பண்டைய காலத்தில் குருகுலம் என்ற பெயரில் இளவரசர்கள் கூட தம் ஆசிரியரிடம் தங்கி நின்று அவருக்கு பல பணிவிடைகள் செய்து அவரிடமிருந்து கல்வியை பெற்றுக் கொண்டனர். எமது இமாம்கள் கூட அகந்தையோ, கர்வமோ சிறிதுமின்றி தம் ஆசான்களின் முன் கைகட்டி நின்று கல்வி கற்றுள்ளனர். மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்கூட தாம் ஒரு நபியாக இருந்தும் அல்லாஹ்வுடன் தனக்கு நேரடியாக உரையாடும் அற்புத பாக்கியம் இருந்தும் தான் அறிவு தேட சென்றபோது தனது ஆசிரியரிடம் உச்சக்கட்ட பணிவையே பேணினார்கள்.

ஆசிரியர்கள் பாடநூல் சம்பந்தமாக கற்பிக்கும் பாடங்களை பயிற்சி நூலில் பதிந்து பரீட்சையில் பயன்படுத்துவதைப் போல, அவர்கள் வாழ்வைப் பற்றிக் கூறும் விடயங்களை உள்ளத்தில் பதிந்து வாழ்வில் பயன்படுத்த வேண்டும். கல்வி, பண்பாடு, ஆளுமை, சிந்தனை, ஒழுக்கம் என அனைத்து பகுதிகளிலும் ஆசான்கள் தமக்கு வழிகாட்டுகிறார்கள்.

ஏணியாய் ஆசிரியர்கள் நின்று தாம் வானத்தை வெல்ல வழி சமைக்கிறார்கள். ஓடமாய் மாறி நாம் இந்த வாழ்வை ஜெயிக்க சுமந்து செல்கிறார்கள். அத்தகைய உத்தமர்களை வாழ்நாள் முழுவதும் நன்றியுடன் நினைவுகூர வேண்டியது நமது கடமையாகும்.

இலங்கையின் பெரும்பான்மை சமூகத்தில் மாணவர்கள் ஆசிரியரின் காலில் விழுந்து வணங்கும் வழக்கம் இருக்கின்றது. உலகின் அனைத்து மக்களும் ஆசிரியர்களை மதிப்பதை கௌரவமாகக் கருதுகின்றனர். அந்த வகையிலேயே ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.

ஆசிரியர்களை கௌரவித்தல் என்பது ஆசிரியர் தினத்தை கோலாகலமாகக் கொண்டாடி, அவர்களைப் பற்றிய புகழுரைகளை அரங்கத்தில் நீட்டி முழக்கி வாசித்து, சேகரித்த பரிசுகளை அவர்களிடம் ஒப்படைப்பதுடன் முற்றுப் பெறுவதில்லை. ஆழ்மனதால் அவர்களின் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். எமது சொற்களும் செயல்களும் பணிவாக இருக்க வேண்டும். எல்லாவற்றிலும் முக்கியமாக அவர்கள் கனாக் காண்பதுபோல அவர்கள் கற்றுத் தரும் கல்வியை கசடறக் கற்று பரீட்சையில் உயர்ந்த புள்ளிகளைக் குவிக்க வேண்டும்.

ஒரு நாட்டின் எதிர்காலம் வகுப்பறைகளில் இருக்கின்றது. பிரபலமான புதுமொழி! அந்த வகுப்பறையின் தளபதிகளான ஆசிரியர்கள் மதிக்கப்படும் போதுதான் ஆரோக்கியமான சமூகத்தை செப்பனிடக் கூடிய மாணவர்கள் செதுக்கப்படுவார்கள். வளமான எதிர்காலத்திற்கு எமது நிறைந்த பிரார்த்தனைகளும் அவசியம். எனவே, அத்தகைய ஆசிரியர்களை கௌரவப்படுத்தி மதிப்பதினூடாக எமது எதிர்காலத்தை ஒளிமயமாக்கிக் கொள்வோம். அதேபோல, அவர்களுக்கான மரியாதையை பாடசாலைக் காலங்களில் வழங்கி விட்டு பாடசாலையை விட்டு விலகி பின் அவர்களை மதிக்காத இழிசெயலை செய்யாமல் காலம் முழுவதும் அவருக்கான கண்ணியத்தை வழங்குவோம்.

எமது பிரார்த்தனைகளில் அவர்களுக்காக இரு கரமேந்தி பிரார்த்திப்போம். அவர்களிடம் கற்ற கல்வியை பரீட்சைக்காக மாத்திரம் ஒதுக்கி விடாமல் எமது முழு வாழ்விலும் நடைமுறைப்படுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூமாலிக் அல் அஷ்அரி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள், "சுத்தம் ஈமானின் பாதியாகும்."
(ஸஹீஹ் முஸ்லிம்)

மேற்படி நபிமொழியை நாம் நோக்கும்போது அது மிக முக்கியமான ஒரு விடயத்தின்பால் மனித சமூகத்தை வழிப்படுத்துகின்றது. அதுதான் சுத்தத்தின் பால் அழைப்பதாகும்.

இஸ்லாம் மனிதனின் உடல், உள ஆரோக்கியத்திற்கான அழகிய வழிகாட்டல்களைத் தந்துள்ளது. ஆரோக்கிய வாழ்விற்கு சுத்தம் முதல் இடத்தை வகிக்கின்றது. அந்த வகையில், இஸ்லாம் மனிதனின் அன்றாட வாழ்க்கையில் சுத்தத்தை வலியுறுத்தி ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டுகின்றது.

ஒரு மனிதன் தன்னை சுத்தப்படுத்தி தூய்மையாக்கிக் கொள்கின்றபோது அவன் ஈமானின் ஒரு பகுதியை அடைந்து விட்டான் என்று சொல்லுமளவு இஸ்லாம் சுத்தத்தை உயர்த்திப் போற்றுகின்றது.

சுத்தம் என்பதற்குள் நாம் இரண்டு விடயங்களை உள்ளடக்க முடியும். முதலாவது, எமது கண்களுக்குத் தெரிகின்ற அசுத்தங்களை விட்டு விலகுவது. மற்றையது, தீய சிந்தனைகள் மற்றும் தீய செயற்பாடுகளில் இருந்து எம்மை நாம் விலக்கிக் கொண்டு தூய்மையானவர்களாக இருப்பது. இங்கு நாம் முதலாவது விடயத்தினையே கவனத்திற் கொள்ள இருக்கின்றோம்.

அழுக்கான உடை, துர்வாடை வீசுகின்ற உடல் இவற்றால் மற்ற மனிதன் அருவருப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்படுகின்றது. வகுப்பறை தொடக்கம் மற்றவர்களுடன் சேர்ந்திருக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இந்நிலை தொடர்கின்றது. சில போது தொழுகையில் அருகில் நிற்கும் தொழுகையாளியின் தொழுகையையும் இது பாழாக்கி விடுகின்றது.

நாம் எமது உடல், உடை, இருப்பிடம் ஆகியவற்றை சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை நபியவர்கள் ஈமானின் பாதி எனக் கூறுவதற்கான முக்கிய காரணம் அல்லாஹ்வும் அதனை மிகவும் விரும்புவதாகும். ''அல்லாஹ் பரிசுத்தமானவர்களை நேசிக்கின்றான்.'' (அல்பகரா)

இந்த அல்குர்ஆன் வசனத்தின் மூலம் நாம் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற வேண்டுமானால் சுத்தம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது. இங்கு அல்லாஹ் மனிதனிடம் அகச் சுத்தம், புறச் சுத்தம் இரண்டையுமே நோக்காகக் கொள்கின்றான்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எப்போதும் தனது உடலை சுத்தப்படுத்தி நறுமணம் பூசி, அடுத்தவர் மனதை மகிழ்விப்பவர்களாக, இருந்தார்கள். அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் உடலிலிருந்து வெளியான நறுமணத்தை விட அதிக நறுமணமுடைய கஸ்தூரியையோ, அம்பரையோ, வேறெந்த நறுமணப் பொருளையோ நான் நுகர்ந்ததில்லை.'' (முஸ்லிம்)

உடலை சுத்தமாக வைத்திருப்பதற்கான அடிப்படை அம்சங்களே பல் துலக்குதல், நகம் வெட்டுதல், தலைமுடி வாருதல், குளித்தல், ஆடைகளை சுத்தம் செய்தல் மற்றும் காதை சுத்தமாக பேணுவதுமாகும். இத்தகைய விடயங்களை ஒரு மனிதன் காலையில் தூக்கத்திலிருந்து எழுந்தவுடன் காலைக்கடனாக செய்து முடித்து தன்னை அழகுபடுத்திக் கொள்வது மிகவும் விரும்பத்தக்கது.

அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கிறார்கள், ''நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இரவிலோ, பகலிலோ தூங்கினால், விழித்ததும் வுழு செய்வதற்கு முன்னர் பல் துலக்கிக் கொள்வார்கள்.'' (அபூதாவூத்)

அதேபோன்று, இருக்கின்ற ஆடையை கழுவி சுத்தமாக அணிந்து கொள்வது நபி வழியாகும். அல்லாஹ் திருமறையில் நபியவர்களைப் பார்த்து பின்வருமாறு எடுத்துரைக்கின்றான்: ''உமது ஆடைகளைத் தூய்மைப்படுத்துவீராக!'' (முத்தஸ்ஸிர்)

மேலும், தலைமுடியை அழகிய முறையில் தூய்மைப்படுத்தி வைத்துக் கொள்ள வழிகாட்டிய நபியவர்கள், தலைவிரி கோலமாக வரண்டுபோன தலைமுடியைத் தொங்கவிட்டுக் கொண்டு மக்களிடையே வருவதனை சபிக்கப்பட்ட ஷைத்தானுக்கு ஒப்பிட்டு கண்டித்தார்கள்.

இவ்வாறு நாம் எம்மை சுத்தமாக வைத்துக் கொள்கின்றபோது எம்மைக் காண்பவர்களின் கண்கள் குளிர்ச்சியடையும். எம்மோடு பேசுகின்ற போதும் அவர்கள் மனம் சுளிக்காமல், எம் மீது வெறுப்புக் கொள்ளாமல் அழகிய முறையில் உரையாடுகின்ற நிலை தோன்றும்.

மனிதன் ஆரோக்கியமாக இருக்கும்போதே உலகில் மகிழ்ச்சியாக இருக்கவும் ஆரோக்கிய நிலையிலே அதிகமாக நல்லமல்கள் செய்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே, முடிந்தளவு உடல், உடையை சுத்தம் பேணி எம் உடல், உள ஆரோக்கியத்துக்கு வழியேற்படுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தில்: ஸனீயாஸ்னைன் கான் (இந்தியா)
தமிழில்: ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம்

# குர்ஆன் குறிப்பிட்டுக் கூறும் நற்செயல்கள்

## 01. மன்னிப்பு

மன்னிப்பு வழங்குவது ஓர் இபாதத் ஆகும். எமது கோபத்தைத் தணித்து ஒருவரின் பாவத்தை மன்னிக்குமாறு இஸ்லாம் எம்மை ஏவுகின்றது.

''மேலும் தீமைக்குக் கூலி அதைப் போன்ற தீமையே ஆகும். ஆனால், எவர் (அதனை) மன்னித்து சமாதானம் செய்கிறாரோ அவருக்குரிய நற்கூலி அல்லாஹ்விடம் இருக்கிறது; நிச்சயமாக அவன் அநியாயம் செய்பவர்களை நேசிக்க மாட்டான்.'' *(அஸ்ஸூரா 42: 40)*



## 02. விருந்தோம்பல்



விருந்தோம்பல், வரவேற்றல், உபசரித்தல் எனும் பண்பானது இஸ்லாத்தில் முன்னுரிமைப்படுத்தப் பட்டுள்ள நற்காரியங்களில் ஒன்றாகும். அல்குர்ஆனில் 51 ஆவது ஸூராவில் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் விருந்தாளிகளை (அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட மலக்கு களை) வரவேற்று உபசரித்த விதம் பற்றி அல்லாஹ் விவரிக்கின்றான். ''அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டோர் தனது விருந்தாளிகளைக் கண்ணியப்படுத்துவர்'' என்பது நபிமொழியாகும்.

## 03. நேர்மை



நேர்மை எனும் நற்பண்பினுள் நம்பிக்கை, நாணயம், விசுவாசம், கடமை தவறாமை, பொறுப்புணர்ச்சி போன்ற குணநலன்கள் அனைத்தும் அடங்கும். இஸ்லாம் நேர்மைக்கு மிக முக்கிய இடமளிக்கின்றது.

''ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; மேலும், உண்மையாளர்களுடன் நீங்களும் ஆகிவிடுங்கள்.'' *(ஸூரா அத்தௌபா 9: 119)*

நேர்மையும் விசுவாசமுமே நம்பிக்கையாளர்களை நயவஞ்சகர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் பண்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. அடக்கம்



அடக்கத்துடன் பணிவாக நடந்து கொள்ளும் பண்பு இஸ்லாம் வரவேற்கும் குணநலன்களில் முக்கியமானதாகும். ஸுஐப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மகள்மார்களில் ஒரு மகள் மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை நாணத்துடன் அணுகிய விதம் பற்றி அல்லாஹ் குர்ஆனில் வர்ணிக்கின்றான்.

''ஈமான் எழுபதுக்கும் மேற்பட்ட கிளைகளை உடையது. வெட்கம் அதில் ஒரு பகுதியாகும்'' என்பது நபிமொழியாகும்.

## 06. இரக்க குணம்



மனிதர்கள் தமக்குள் அன்பால் பிணைந்திருக்க வேண்டும் என அல்லாஹ் கட்டளையிடுகின்றான். ''மனிதர்களுக்கு இரக்கம் காட்டாதவன் மீது அல்லாஹ் இரக்கம் காட்ட மாட்டான்'' என்பது நபிமொழியாகும்.

## 05. கற்பொழுக்கம்

கற்பொழுக்கம் பேணுவது இருபாலார் மீதும் இஸ்லாம் எதிர்பார்க்கும் மிக முக்கிய விடயமாகும். ''நபியே! முஃமின்களான ஆடவர்களுக்கு நீர் கூறுவீராக, அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; வெட்கத் தலங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்; அது அவர்களுக்குப் பரிசுத்தமானதாகும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவன். இன்னும், முஃமினான பெண்களுக்கும் நீர் கூறுவீராக, அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்.'' *(ஸூரா அந்நூர் 24: 30)*

## 07. உண்மை பேசுதல்



எப்போதும் உண்மையாளனாகத் திகழ வேண்டும் என்பது இஸ்லாம் வலியுறுத்தும் நற்குணமாகும். ''நீங்கள் உண்மையாளர்களாக இருங்கள்; அது நேர்வழிக்கு இட்டுச் செல்லும். நேர்வழி சொர்க்கத்திற்கு இட்டுச் செல்லும்'' என்பது நபிமொழியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com



# மிதக்க வைக்கும் சாக்கடல்

இஸ்லாம், கிறிஸ்தவம், யூதம் ஆகிய மூன்று மதங்களுடனும் மிகவும் நெருக்கமான தொடர்பைக் கொண்ட ஒன்றுதான் இந்த சாக்கடல். மூன்று மதங்களினதும் வேதங்களில் இக்கடல் அப்பிரதேசம் மற்றும் அங்கு நடந்த சில வரலாற்று நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. உலகப் பிரபல்யமிக்க இந்த சாக்கடலின் அதிசயங்கள் பற்றி இத்தொடரில் நோக்குவோம்.

### சாக்கடலின் அமைவிடம்



சாக்கடல் கிழக்கே ஜோர்தானையும் மேற்கே பலஸ்தீனையும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு நாடுகளுக்கும் சரி நடுவே ஜோர்தான் பெரும் பிளவுப் பள்ளத்தாக்கில் (Jordan Rift Valley) அமைந்துள்ளது. இது நான்கு புறத்தாலும் நிலத்தால் சூழப்பட்டுள்ள ஒரு நீர்ப் பரப்பும் கூட. இது 67 கி.மீ. (42 மைல்) நீளமும் 18 கி.மீ. (11 மைல்) அகலமும் பரந்து விரிந்துள்ளது. அதுமட்டுமன்றி, உலகின் மிகவும் தாழ்வான நிலப் பரப்பும் இதுதான். கடல் மட்டத்திலிருந்து - 395 மீற்றர் (1295 அடி) பள்ளத்தில் இக்கடலும் அது சார்ந்த பிரதேசங்களும் அமைந்துள்ளன. இவ்விடத்தில் அல்குர்ஆனின் ஒரு வரலாற்று அற்புதத்தை ஞாபகப் படுத்தியாக வேண்டும்.

உலகிலேயே மிகவும் தாழ்வான பகுதி சாக்கடல் பகுதிதான் என்பது நவீன தொழிநுட்பக் கருவிகள், அளவை முறைகள், புவியியல் ஆய்வு முறைகள் என்பவற்றின் துணையுடன்தான் அண்மைக் காலங்களில் கண்டறியப்பட்டது. ஆனால், இத்தகைய தொழிநுட்ப, அளவையியல் முறைமைகள் இல்லாத அன்றைய காலத்தில் அல்குர்ஆன் இதனைத் துல்லியமாகக் கூறியிருப்பது அல்குர்ஆன் ஓர் இறைவேதம் என்பதற்கு சான்றாகும். சூரா அர்ரூமில் மூன்றாவது வசனத்தில் 'அத்னல் அர்ழ்' தாழ்வான பூமி என்ற பிரயோகத்தின் மூலம் இதனை அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

### சாக்கடல் என்று பெயர் வரக் காரணம்


இது தமிழில் சாக்கடல், சாவுக்கடல் என்றும் ஆங்கிலத்தில் Dead Sea என்றும் அரபு மொழியில் அல்பஹ்ருல் மைய்யித் என்றும் அழைக்கப்படுகிறது. இது கடல் என்று அழைக்கப்பட்டாலும் உண்மையில் கடல் அல்ல. உப்பு நீர் நிறைந்த ஒரு பெரிய ஏரி. ஏரிகளில் பொதுவாக உப்புத் தன்மை காணப்படுவதில்லை. ஆனால், இதன் நீரில் உப்பின் செறிவு அதிகமாக இருப்பதால் இதனைக் கடல் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கின்றோம். அத்தோடு, இது சாக்கடல் என்று அழைக்கப்படுவதற்கு முக்கியமாக இரண்டு காரணிகள் உள்ளன. ஒன்று, சாதாரண கடல் நீரை விடவும் இக்கடலில் 8.6 மடங்கு உப்புச் செறிவு அதிகமாக இருப்பதால் இதில் மீன்களோ, கடல் பாசிகளோ வாழ்வதில்லை. அத்தோடு, தரை வாழ் உயிரினங்கள் இதற்கு நீர் அருந்த வருவதுமில்லை. எனவே, இது செத்த கடல் எனப்படுகின்றது.

இரண்டாவது காரணம், ஜோர்தான் ஆற்றிலிருந்தும் இன்னும் சில ஓடைகளில் இருந்தும் இங்கு வந்து சேரும் நீர் அப்படியே இங்கு தேங்கி நிற்கின்றது. இங்கிருந்து வேறு எங்கும் நீர் ஓடுவதில்லை. ஆற்றினதும் ஓடைகளினதும் நீர் இறுதியாக வந்தடையும் இடம் என்பதாலும் இது சாக்கடல் எனப்படுகிறது.





**சாக்கடலின் வரலாறு**

சாக்கடல் மிகத் தொன்மையான ஏரியாகும். சுமார் 37 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். உலகிலேயே மிக நீண்ட காலமாக மக்கள் தொடர்ந்து வசித்து வருமிடமாக சாக்கடலுக்கு அண்மையிலுள்ள ஜெரிக்கோ நகரம் நம்பப்படுகிறது. பைபிளில் குறிப்பிடப்படும் சொடம், கெமோரா அதாவது லூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய சமூகம் வாழ்ந்த அல்லாஹ்வால் அழிக்கப்பட்ட (பார்க்க: அல்குர்ஆன் 29: 30-35) நகரங்கள் சாக்கடலின் தென்பகுதியில் அமைந்துள்ளதாக ஆய்வாளர்கள் நம்புகிறார்கள். எகிப்திய அரசி கிளியோபட்ரா சாக்கடலின் கரையோரத்தில் கிடைத்த கனிமங்களைக் கொண்டு அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மருந்து வகைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நிறுவியிருந்ததாகவும் எகிப்திய பிரமிட்டுகளில் மம்மிகள் சாக்கடலில் உள்ள கனிமங்களால் தயாரிக்கப்பட்ட மருந்துகளைக் கொண்டுதான் பாதுகாக்கப்பட்டன என்றும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இன்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த இடத்தைப் பார்வையிட ஆண்டொன்றுக்கு சுமார் 2.9 மில்லியன் சுற்றுலாப் பிரயாணிகள் வருகின்றனர்.

**மிதக்க வைக்கும் சாக்கடல்**

சாக்கடல் பிரபல்யமாவதற்கு முக்கிய காரணமே அது மிதக்கும் தன்மை கொண்டிருப்பதால்தான். பொதுவாக நாம் ஆற்றிலோ, குளத்திலோ குதித்தால் நீரினுள் அமிழ்ந்து விடுவோம். ஆனால், சாக்கடல் அவ்வாறல்ல. அதில் குதித்தாலும் அது எம்மை வெளியே அழுத்தி நீரினுள் அமிழ்ந்து விடாமல் செய்யும். சுற்றுலாப் பயணிகள் சாக்கடலில் மிதந்து கொண்டே புத்தகங்களும் செய்தித்தாள்களும் படிக்கும் காட்சிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இதற்கு முக்கியமானதொரு காரணம் உண்டு.

மற்றைய கடல் நீரில் உள்ள உப்பின் செறிவை விடவும் இதில் 8.6 மடங்கு அதிகமான உப்பு செறிந்திருக்கின்றது. இதனால், இயற்கையாகவே நீரில் மிதப்புத்தன்மை (Buoyancy) உருவாகின்றது. எனவேதான், இந்நீரின் அடர்த்தியை விட குறைந்த செறிவுள்ள எதையும் இது மிதக்கச் செய்யும். இது மனித உடலைவிட அதிகமான அடர்த்தி என்பதால்தான் நாமும் மிதக்கின்றோம். இதன் நீர் அதிகளவு உப்புத்தன்மை கொண்டதாக இருப்பதற்கு முக்கியமான இரு காரணங்கள் உள்ளன. ஒன்று, சுற்றியுள்ள பகுதியின் ஆறுகள் இறுதியாக வந்து சேரும் இடம் இக்கடல் என்பதாலும் இதிலிருந்து நீர் வேறு எங்கும் கடத்தப்படாததாலும் ஆற்று நீரிலுள்ள கனிம உப்புக்கள் இங்கே படிந்து விடுகின்றன. இரண்டாவது, ஆவியாதல் மூலம் மட்டுமே இக்கடலிலிருந்து நீர் வெளியேறுவதால் கனிமங்கள் தங்கிவிட நீர் மட்டும் சூரிய ஒளியால் வடிகட்டப்பட்டு மேலே செல்கின்றது. இக்காரணங்கள்தான் உப்பின் அடர்த்தி கூடுவதற்கும் நாம் மிதப்பதற்கும் காரணமாக உள்ளன.

**சாக்கடல் பகுதியில் உயிரினங்கள்**

அதிகளவு உவர்ப்புத்தன்மை கொண்ட இந்நீரில் மீன்களோ, தாவரங்களோ வாழ முடியா விட்டாலும் மிகச் சிறியளவில் நுண்ணுயிரிகள் வாழ்கின்றன. சாக்கடல் பகுதியில் பலவிதமான பறவைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டகம், முயல், மலையாடு, நரி, குள்ளநரி, சிறுத்தை போன்ற விலங்குகளும் வாழ்கின்றன. பலஸ்தீன், ஜோர்தான் நாடுகள் இப்பகுதியில் இயற்கை சரணாலயங்களை அமைத்துள்ளன. பப்பைரஸ் மற்றும் தென்னை இனத் தாவரங்க ளும் இங்கு காணப்படுகின்றன.


### சாக்கடலின் மருத்துவக் குணங்கள்

இந்த சாக்கடலில் பொட்டாசியம், மக்னீசியம், புரோமைட் உள்ளிட்ட பொருட்கள் பெருமளவில் கிடைக்கின்றன. மக்னீசியம் குளோரைட் 53, பொட் டாசியம் குளோரைட் 37, சோடியம் குளோரைட் (சாதாரண உப்பு) 8, இன்னும் வேறு பல உப்புக் கள் 2 என்ற அமைப்பில் கிடைக்கின்றன. இவை இரசாயன மற்றும் இரசாயன உரத் தொழிற்சாலை களுக்கு பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. எகிப் தில் ஆயிரம் ஆண்டுகளாக மம்மிக்கள் கெட்டுப் போகாமல் இருக்கக் காரணம் சாக்கடலில் இருந்து வெளியாகும் அஸ்ஃபால்ட் (asphalt) என்னும் நிலக் கீழ் உப்பு மூலம் அவை பாதுகாக்கப்பட்டதுதான். சாக்கடல் நீரிலும் சேற்றிலும் கலந்துள்ள மருத்து வக் குணங்கள் தோல் நோய்களுக்குச் சிகிச்சை யளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இச்சேறு சொரி யாசிஸ் (Psoriasis) முகப்பரு, சொறி, படை, பொடுகு உட்பட சில தோல் நோய்களைக் குணப்படுத்து வதாகக் கருதப்படுகிறது. இதற்காகவே ஏராளமான பேர் இங்கு வந்து சாக்கடல் சேற்றை உடலில் பூசிக் கொள்கின்றனர். இதனாலேயே சாக்கடலுக்கு The Health Spa என்றும் Natural Spa என்றும் பெயர் கூறப்படுகின்றது. மட்டுமன்றி, இங்கிருந்து கிடைக் கும் களிமண்ணையும் தாதுப் பொருட்களையும் பயன்படுத்தி ஏராளமான அழகு சாதனப் பொருட் களும் தயாரிக்கப்படுகின்றன.

பல கனிமங்களின் படிவுகள் சாக்கடலின் கரை யில் காணப்படல், மாசுபடாத வளி, தாழ்வான பகுதி என்பதால் குறைவான வளியமுக்கம், புற ஊதாக் கதிர்களின் வீச்சுக் குறைவாயிருத்தல் என் பன உடல்நலத்தை ஊக்குவிக்கும் காரணிகளாக அமைவதால் உடல் மற்றும் அழகுச் சிகிச்சைக் குப் புகழ் பெற்ற இடமாகவும் சாக்கடல் விளங்கு கிறது. சாக்கடலைச் சுற்றிலும் பல தொழிற்சாலை கள் அமைக்கப்பட்டு, பலவகை உப்புக்கள் தயாரிக் கப்படுகின்றன. இங்கிருந்து கணிசமான அளவு பொட்டாஷ் (ஏ) சாம்பல் உப்பு எடுக்கப்பட்டு, உரம் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இத் தனை காரணங்களும் சேர்ந்து இயற்கையாகவே அல்லாஹ் சாக்கடலையும் அதன் அண்டிய பகுதி களையும் ஓர் ஆரோக்கிய பூங்காவாக அமைத்துள் ளான்.

### அல்குர்ஆனின் சான்று

ஆய்வாளர்களின் யூகங்களின்படி பல இலட் சம் வருடங்களுக்கு முன்பிருந்து சாக்கடல் உரு வாகி இருக்கலாம் என்று நம்பப்பட்டாலும் அது இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய காலத்தில் லூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களு டைய சமூகத்தை கல்மாரி பொழிந்து அந்த ஊரைத் தலைகீழாகப் புரட்டியதிலிருந்துதான் இது நடந் திருக்க வேண்டும் என்பதும் நவீன கால தொல் பொருள் ஆய்வாளர்களின் ஒரு முக்கிய கருது கோளாகும். காரணம் சொடம், கெமூரா எனும் இப்பகுதிகளை அண்மித்த பகுதியில் ஒரு பாரிய எரிமலை வெடிப்பும் புவி நடுக்கமும் ஏற்பட்ட தாகவும் அதுவே சுடப்பட்ட கற்களாக அந்த ஊர் வாசிகள் மீது பொழிந்து அப்பகுதி தலைகீழாக புரட்டப்பட்டதாகவும் இதனை எரிமலையில் இருந்து எடுக்கப்படக் கூடிய சல்பர் இக்கடல் பகு தியில் அதிகமாக இருப்பது உறுதி செய்வதாகவும் விஞ்ஞானிகள் பல கருத்துக்களை முன்வைக் கின்றனர். லூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களு டைய வரலாற்றை அல்லாஹ் குர்ஆனில் கூறியத னூடாக சாக்கடலின் அறிவியல் தன்மைகள் பற் றியும் எம்மை ஆராயத் தூண்டுகின்றான். கீழே படியுங்கள். ''ஆகவே, பொழுது உதிக்கும் வேளை யில், அவர்களை பேரிடி முழக்கம் பிடித்துக் கொண்டது. பின்பு அவர்களுடைய ஊரை மேல் கீழாகப் புரட்டி விட்டோம். இன்னும், அவர்கள் மேல் சுடப்பட்ட களிமண்ணாலான கற்களைப் பொழியச் செய்தோம். நிச்சயமாக இதில் சிந்த னையுடையோருக்குப் பல அத்தாட்சிகள் இருக் கின்றன.'' *(15:73)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவின் அழகு

இமாம் அபூஹனீபா மிகப் பெரும் மார்க்க மேதை. அவரது மாணவர்களும் மிகப் பெரும் மேதைகளாக திகழ்ந்தனர். இன்றளவும் இமாம் அபூஹனீபா அவர்கள் வகுத்த சட்டதிட்டங்களை முழுமையாக பின்பற்றும் மக்கள் உலகம் முழுவதும் இருக்கின்றார்கள்.

இமாம் அபூஹனீபா அவர்களின் வீட்டுக்கு அருகில் ஒரு யூதன் வாழ்ந்து வந்தான். அவன் தினமும் குடித்துவிட்டு பாட்டுப் பாடி கும்மாளமிட்டுக் கொண்டும் அடாவடிகள் செய்து கொண்டும் இமாம் அபூஹனீபாவிற்கு பல தொந்தரவுகள் செய்து கொண்டிருந்தான். இமாமவர்கள் நினைத்திருந்தால் தனது செல்வாக்கால் அவனை அங்கிருந்து துரத்தியிருக்க முடியும். ஆனால், பெருந்தன்மையாக அவனை தொடர்ந்து மன்னித்துக் கொண்டிருந்தார்கள்.

திடீரென ஒருநாள் அவனைக் காணவில்லை. சுற்றுச் சூழல் வழமைக்கு மாறாக அமைதியுடன் காட்சியளித்தது. காரணத்தை விசாரித்துப் பார்த்தால் மதுபானம் அருந்திய குற்றச்சாட்டுக்காக அரசு காவலர்கள் அவனை சிறையில் அடைத்து விட்டார்கள்.

செய்தியறிந்த இமாம் அபூஹனீபா அவர்கள் உடனடியாக புறப்பட்டுச் சென்று அவனை சந்தித்தார்கள். அவரின் விண்ணப்பப்படி அவன் விரைவாக விடுதலை செய்யப்பட்டான்.

வெளியே வந்த அந்த யூதன் தான் இமாமவர்களுக்கு செய்த அநியாயங்களையும் அவரது பெருந்தன்மையையும் நினைத்து மனம் திருந்தினான்.

அறிவில் சிறந்தவர்கள் எப்போதும் விசாலமான மனம் படைத்தவர்களாக இருப்பார்கள். பொறுமை, மன்னிப்பு, பணிவு ஆகிய மூன்றும் அவர்களது அழகிய அணிகலன்களாகத் திகழும். எனவே, நாமும் அந்த பெரியோர்களிடமிருந்து அவர்களின் அறிவை மாத்திரம் பெற்றுக் கொள்ளாது அவர்களின் இவ்வழகிய அணிகலன்களையும் பெற்றுக் கொள்வோம்.

---



அல்குர்ஆனை ஓதத் துவங்கும் முன்னர் உங்கள் இதயம் உங்களுடனேயே இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அது வெறுமனே ஒரு சதைக் கட்டியாகவன்றி உங்கள் கவனம், நினைவு, உணர்வுகள், ஆவல், செயற்பாடுகள் ஆகிய அனைசித்தினதும் மையமாக திகழ வேண்டும். அதாவது, உங்கள் அகத்தின் பரிபூரண வடிவமாக அவ்விதயம் மிளிர வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் அல்லாஹ்வின் ஒப்பற்ற வெகுமதிகளை பெறும் ஆற்றல் நமக்கு கிடைக்கும். **–குர்ரம் முராத்–**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சில இமாம்களின் கருத்துக்கள்

- ❖ குர்ஆனின் நிழலின் கீழ் வாழ்ந்த சுவை; அவ் வாறு வாழ்ந்தவரால் மட்டுமே அனுபவிக்க முடியும். - அஷ் ஷஹீத் செய்யித் குதுப் (ரஹி மஹுல்லாஹ்)
- ❖ மேற்கு நாகரிகம் வரப்பிரசாதமல்ல. மாறாக, மேற்கின் முடிவைக் கட்டிடக் கூறும் சாவு மணி இஸ்லாமே. - அல்லாமா இக்பால்
- ❖ இஸ்லாமிய எழுச்சி சீரடைய வேண்டும் என் பதற்காக அதில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரி னதும் குறைகளை சுட்டிக் காட்டிக் கொண்டே இருப்பேன். - முஹம்மத் அல் கஸ்ஸாலி
- ❖ இஸ்லாத்தை ஒரு முழுமையான வாழ்க்கை முறையாக எடுத்து நடக்க வேண்டும். ஒரு பகு தியை மாத்திரம் படிக்கக் கூடாது; அது எப் பயனையும் அளிக்காது.
 - முஹம்மத் அல் கஸ்ஸாலி
- ❖ மனிதனின் உண்மையான அந்தஸ்து இந்தப் பிரபஞ்சத்தில் இறைவனின் பிரதிநிதியாக மனி தன் திகழ்கின்றான் என்பதுவே. இத்தரணி யில் அவனது உண்மையான அஸ்தஸ்தாகும்.
 - பா. முஹம்மத் யூசுப்
- ❖ மனவேதனை என்பது மனிதன் அனுபவிக் கும் துன்பங்களில் ஒன்றாகும். ஆனால், அது பயன் தரக் கூடியது. மனதில் தோன்றும் வேதனை அவனை குறிக்கோளின் பக்கம் உந்தித் தள்ளு கிறது. இந்த மனவேதனை நிலைக்கும் போதெல் லாம் அவன் முன்னேறிக் கொண்டே இருப் பான். இந்த வேதனை இல்லையென்றால் அவனால் தன் குறிக்கோளை அடைய முடி யாது. உயிரற்ற பொருட்களுக்கு மனவேதனை கிடையாது. - மௌலானா ரூமி

✍ **நுஸ்தா பின்த் மௌஜூத்**
**இஸ்லாஹியா வளாகம், புத்தளம்**

# தோள் கொடுக்கும் தோழமை!

முயற்சிக்கும் உழைப்பிற்கும்
உந்துசக்தியாக துணையிருக்கும்!
உண்மையிலும் நேர்மையிலும்
ஒழுக்கமாக இணைந்திருக்கும்!

கவலையிலும் கண்ணீரிலும்
தாயாக அரவணைக்கும்!
தோல்வியிலும் வெற்றியிலும்
துணை நின்று அமைதி தரும்!

பாசத்தால், பண்பால்
பிழைகளை நீக்கி விடும்!
தன்னலமின்றி தாராளமாக
தன் இன்னலில் துயர் துடைக்கும்!

துவண்டு விடாதே! நான் இருப்பேன் என்று
தூய நட்பிற்கு அழகு சேர்க்கும்!
தடைக்கற்களை தாண்டி ஜெயம் பெற
தைரியமூட்டி ஊக்கப்படுத்தும்!

புரிந்திடுவீர் மானிடரே!
அன்பாலும் அழகிய பண்பாலும்
அரவணைத்து நிற்கும் தூய உறவே
தோள் கொடுக்கும் தோழமை!

✍ **ஸர்மிலா ஏ. றாஸிக்**
**காத்தான்குடி - 05**

# அறிவுக் களஞ்சியம்

1. அமெரிக்காவிற்கு ஐக்கிய அமெரிக்க நாடு என்ற பெயரிட்ட இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் யார்? **வின்ஸ்டன் சேர்ச்சில்**
2. ஏர்ப்பு வலியை உருவாக்கும் பற்றீயா எது? **குலோஸ்திரிடியம் ரெற்றனி**
3. சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் எந்த நகரத்தில் அமைந்துள்ளது? **வியன்னா நகரில்**
4. நிலக்கண்ணிவெடிகளைத் தடைசெய்ய சர்வ தேச ஒப்பந்தம் கைச்சாத்தாகிய ஆண்டு எது? **1997 ஆம் ஆண்டு**
5. மனித இனத்தின் இரண்டாவது தந்தை என அழைக்கப்படும் நபியின் பெயர் என்ன? **நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்**
6. அதான் என்பதை நாம் 'பாங்கு' எங்கின்றோம். பாங்கு எனும் சொல் எந்த மொழிச் சொல்லா கும்? **பாரசீக சொல்**
7. ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு கஃபதுல்லாவை நாலாம் சுல்தான் முராத் என்பவர் புதுப்பித் துக் கட்டினார்? **ஹிஜ்ரி 1039 ஆம் ஆண்டு**

✍ **எம்.ஏ.எப். அஸ்னா**
**பு/கல்/ திகழி முஸ்லிம் ம.வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்புள்ள ஆசானே!

அன்புள்ள ஆசானே!
அரவணைக்கும் ஆசானே!
அறிவு என்ற பாலை
அன்பாய் ஊட்டினாய் எமக்கு

அறிவும் பண்பும் ஒழுக்கமும்
ஓங்கச் செய்தது எம் மனதில் – நீயே!
கல்விச் சுடராய் எம்மில் வீசிட
காரணம் நீயே!

அறிவுக் கண்ணை திறக்கச் செய்தாய்!
அன்பாலே எம்மை பயிற்றுவித்தாய்!
அன்பாலே எம்மை வென்றாய்!
ஏணியாய் நீ நின்றாய்!

கலையெல்லாம் நான் உன்னிடம் கற்றேன்
வெற்றிப் படியையும் தாண்டி விட்டேன்
உன் புகழ் பூமியில் ஓங்க
உன் அன்பே போதும் ஆசானே!

என்றும் இறையோனின் ஆசியும் அருளும்
ஆசானே! உனக்கே உரித்தாகட்டும்
வாழ்த்துகிறேன் என்றும் உன் மாணவியாய்
வாழ்க வளமுடன்!

ருஸைக்கா நிஸ்தார்
கா/முஸ்லிம் ம.க, காலி

## முயற்சியின் மறுபெயர் ஜெம்ஸின்

1956ஆம் ஆண்டு பிறந்த கறுப்பின பெண்ணான ஜெம்ஸினுக்கு 12 வயது வரை மூளைத் திறன் குறைவு நோய் இருந்தது. அதனால் மாணவர்கள் மட்டுமின்றி, ஆசிரியர்களும் அவளை ஏளனம் செய்வார்கள். அந்த ஏளனம் தாங்காமல் பல நாட்கள் அவள் இருட்டு மூலையில் உட்கார்ந்து அழுதிருக்கிறாள்.

நோயில் இருந்து விடுபட்ட ஜெம்ஸினுக்கு சாதிக்க வேண்டும் என்ற வெறி பிறந்தது. தனது விடாமுயற்சியினால் அமெரிக்க அமைதி அறிவியல் கழகத்தில் இணைந்து பணியாற்ற துவங்கினார். கோள்களின் சுற்றுப் பாதை பற்றி ஆய்வு செய்து 9 தடவை எம்.ஏ. பட்டங்கள் பெற்றார். இவை எல்லாவற்றினதும் மகுடமாக 1992 ஆம் ஆண்டு எண்டோவர் விண்கலத்தில் விண்வெளிக்குச் சென்று சுமார் ஒன்பது மாதங்கள் தங்கியிருந்து சாதனை படைத்தாள்.

அது மாத்திரமின்றி, ஜெம்ஸின் மிகச் சிறந்த நடன கலைஞராகவும் புகழ் பெற்றார். பின்ர் டிஸ்கவரி மற்றும் ஜியோகிராபின் தொலைக்காட்சி அலைவரிசைகளில் வானியல் சம்பந்தமான நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கினார். இவ்வாறு தான் கனாக் கண்ட அனைத்து விடயங்களையும் தன் விடாமுயற்சியால் சாதித்துக் காட்டினார்.

சோதனைகள் வருவது சாதித்துக் காட்டவே தவிர, வாழ்வே வெறுத்து முடங்கிப் போக அல்ல.

ராஹிலா ஸைத்தூன்

## அல்குர்ஆன் பற்றிய சிறு துளிகள்



1. அல்பாத்திஹாவில் உள்ள மொத்த எழுத்துக்கள் - 126
2. அனைத்து வசனங்களிலும் 'அல்லாஹ்' என்ற சொல் இடம்பெற்ற அத்தியாயம்- முஜாதலா எனப்படும் 58 வது அத்தியாயம்
4. அல்குர்ஆனில் பெயர் கூறப்பட்டுள்ள பெண் மணி- அன்னைமர்யம் (அலைஹிஸ்ஸலாம்)
5. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பெயர் அல்குர்ஆனில் எத்தனை இடங்களில் இடம்பெற்றுள்ளது? 4
6. அல்குர்ஆனில் ஸகாத்துடன் இணைத்துக் கூறப்பட்டுள்ள வணக்கம் எது? தொழுகை
7. அல்குர்ஆனில் அல்லாஹுத்தஆலாவினால் 'மனிதனுடைய விரோதி' எனக் குறிப்பிடப் படுபவன் - ஷைத்தான்
8. அல்லாஹுத் தஆலா ஒரு நகரத்தின் மீது சத்தியம் செய்துள்ளான். அது எந்த நகரம்? மக்கமா நகரம் (95: 3)
9. அல்குர்ஆனில் எத்தனை அத்தியாயங்கள் உயிரினங்களின் பெயர்களை தாங்கி நிற்கின்றன? 6

பாத்திமா மல்ஹா முனாஸ்
ஜாமிஆ ஆயிஷா ஸித்தீக்கா, மாவனல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விழாக்களும் ஆண்டுகளும்

- 1 ஆவது வருடம் - கடதாசி விழா
- 5 ஆவது வருடம் - இரும்பு விழா
- 10 ஆவது வருடம் - தகர விழா
- 25 ஆவது வருடம் - வெள்ளி விழா
- 30 ஆவது வருடம் - முத்து விழா
- 40 ஆவது வருடம் - மாணிக்க விழா
- 50 ஆவது வருடம் - பொன் விழா
- 60 ஆவது வருடம் - வைர விழா / மணி விழா
- 75 ஆவது வருடம் - பவள விழா
- 80 ஆவது வருடம் - அமுத விழா
- 100 ஆவது வருடம் - நூற்றாண்டு விழா
- 1000 ஆவது வருடம் - மிலேனியம் விழா

**எம்.ஏ. ஆயிஷா அமானா**
**க/தெநு/ வெலம்பொட மு.ம.வி.**


## தெரிந்து கொள்ளுங்கள்
# மனித மூட்டுக்கள்

- நகரும் மூட்டுக்கள்

எலும்புகள் இயங்க மூட்டுக்கள் உதவுகின்றன. தோள்பட்டை பந்தாகவும் மூட்டாகவும் உள்ளது. முழங்கால் மற்றும் முழங்கை பிணைச்சலகள் அதாவது, ஒரு கதவின் பிணைச்சல் போன்றது. கழுத்து சுழலும் மூட்டு. இது தலையை சுழற்ற உதவுகிறது.

- முள்ளந்தண்டு மூட்டுக்கள்

முதுகெலும்புக்கு இடையில் உள்ள மூட்டுகள் 'குருத்தெலும்பு' ஆகும். குருத்தெலும்பு அடுக்குகளினால் இணைக்கப்பட்டுள்ளது. இது விறைப்பாக இருக்கும். ஆனாலும், சிறிய இயக்கத்திற்கு அனுமதிக்கும்.




- முழங்கால் மூட்டுக்கள்

முழங்கால் மூட்டுகள், சைனோவியல் திரவம் என அழைக்கப்படும் உறைகள் போன்றவை. எனவே, இவை பசை மூட்டு என்று அழைக்கப்படும்.

**எப்.எம்.எம். இல்மா**
**கு/வல்பாலுவ மு.ம.வி, கல்கமுவ**

# இனிய நட்பு வேண்டும்



*இறை நிழலின்*
*தஃவா களத்தில் பயணிக்க*
*இறைமறையை*
*வாழ்முறையாக கொண்டு*
*வழிதவறும்போது நேர்வழிப்படுத்தி*
*அறிவுரை கூறி ஆற்றுப்படுத்த*
*அல்லாஹ்வுக்காக இணைந்து*
*அவனுக்காகப் பரிந்து*
*மஹ்ஷர் வெளியில் நிழல் பெற*
*ஓர் இனிய நட்பு வேண்டும்*

**மன்ஸூர் மதீஹா**
**பாணகமுவ, குருணாகல்**

# பயனில்லை

ஆபத்துக்கு உதவாத நண்பன்
அவசரத்துக்கு உதவாத சொந்தம்
பசிக்கு உதவாத உணவு
தேவைக்கு உதவாக பணம்
இருந்தும் பயனில்லை

**எப்.எம்.எம். இல்மன்**
**கு/வல்பாலுவ மு.ம.வி, கல்கமுவ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்



ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. நபிமார்களிடம் அவசியம் இருக்க வேண்டிய பண்புகளுள் ஒன்று 'அல்பதானத்' ஆகும். இதன் கருத்து யாது?
2. அரபு மொழியில் கம்ஸா என்றால் ஐந்து. தமானியா என்றால் எத்தனை?
3. ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு நான்கு பெண் குழந்தைகள். இவர்களுள் முதலாமவர் பிறந்தது நபித்துவத்துக்கு முன் 10 ஆம் ஆண்டில் ஆகும். அக்குழந்தையின் பெயர் என்ன?
4. பங்குதாரர்கள் பலர் தத்தமது மூலதனத்தை ஒன்று சேர்த்து ஓர் உற்பத்தி முயற்சியில் ஈடுபடும் கூட்டுப் பங்குடமை அமைப்புக்குரிய அரபுச் சொல் யாது?
5. பாத்திமா நாயகி அவர்களுக்கு மூன்று ஆண் குழந்தைகள். ஒருவர் இமாம் ஹஸன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள். அடுத்தவர் ஹுஸைன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள். மற்றையவரின் பெயர் என்ன?
6. அல்லாஹுத்தஆலாவுக்கு அவசியம் இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்று நாவின்றிப் பேசுதல். இதன் அரபுக் கருத்து யாது?
7. அல் மாலிக் என்றால் அரசன் என்று பொருள்படும். மாலிகுல் முல்க் என்றால் பொருள் என்ன?
8. பனூ இஸ்ராயீல்கள் எனப்படும் இஸ்ரேலியர்களுக்கு நபியாக அனுப்பப்பட்டவர் யார்?
9. ஹஸரத் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை அல்லாஹ் படைத்ததும் பூமிக்கு அனுப்பியதும் வபாத்தாக்கியதும் ஒரே கிழமையில் தான். அது என்ன கிழமை?
10. நபிமார்களில் சிலர் பல கொடுமைகளுக்கும் சவால்களுக்கும் மத்தியிலும் மிகப் பயங்கரமான சூழ்நிலைகளிலும் தமது சன்மார்க்கப் போதனைகளைச் செய்தனர். தாம் எதிர்கொண்ட துன்பங்களையும் துயரங்களையும் துச்சமென மதித்து இறை பாதையில் தைரியமாக இருந்ததன் காரணமாக இவர்களுள் ஐந்து பேர் 'உலுல் அஸ்ம்' திடசித்தம் உடையவர்கள் எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டனர். இந்த ஐந்து நபிமார்களினதும் பெயர்களைக் கூறுக.

---

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. 1919 இல் சர்வதேச சங்கம் உருக்கப்பட்டபோது ஆரம்பத்தில் அங்கத்துவம் பெற்றிருந்த நாடுகள் எத்தனை?
2. மக்களை அடிமையாக்கும் கொள்கை என்று வர்ணிக்கப்படும் கொள்கை பாஸிஸம் என்பதாகும். இக்கொள்கையின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
3. இலங்கையின் இரத்தினக் கற்களை மிக அதிகளவில் கொள்வனவு செய்யும் நாடு எது?
4. இலங்கையின் இரத்தினக் கற்களை அதிகளவில் வாங்கும் ஐரோப்பிய நாடு எது?
5. ஜெனரல் ஏரியல் ஷிரோன் இஸ்ரேலின் எத்தனையாவது பிரதம மந்திரியாவார்?
6. மஹரகமையில் அமைந்துள்ள தேசிய கல்வி நிர்வாகம் எத்தனையாம் ஆண்டில் இயங்கத் தொடங்கியது?
7. இலங்கையின் விமான சேவை 1979 ஆம் ஆண்டுக்கு முன்னர் என்ன பெயர் கொண்டு அழைக்கப்பட்டது.
8. நிலக்கண்ணி வெடிகளைத் தடைசெய்யும் சர்வதேச ஒப்பந்தம் கனடாவில் கையெழுத்திடப்பட்ட ஆண்டு எது?

19. இலங்கையில் வேடுவர்கள் செறிந்து வாழும் இடம் எந்தத் தேர்தல் தொகுதியாகும்?
20. 'வெண்புறாவே' எனும் சமாதானப் பாடலை இயற்றியவர் மர்ஹூம் எம்.எச்.எம். ஷம்ஸ். பாடியவர் நிரோஷா விராஜினி. இப்பாடலுக்கு இசையமைத்தவர் யார்?

விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

| | | |
|---|---|---|
| مَاذَا تُرِيْدُ أَنْ تَكُوْنَ؟ | ← | أُرِيْدُ أَنْ أَكُوْنَ |
| مَاذَا تُرِيْدُ أَنْ تُصْبِحَ؟ | ← | أُرِيْدُ أن أصبح |
| مَاذَا تتمنَّى أَنْ تكُوْنَ؟ | ← | أَتَمنَّى أَنْ أَكُوْنَ |


مُدَرِّسًا

| | | |
|---|---|---|
| مَاذَا تُرِيدين أَنْ تَكُوْنِي؟ | ← | أُرِيْدُ أَنْ أَكُوْنَ مُدرِّسَةً |

أُرِيْدُ أَنْ أَكُوْنَ ..................


DOCTOR
طَبِيْبًا


ENGINEER
مُهَنْدِسًا


PAINTER
دَهَّانًا


WELDER
لَحَّامًا


NURSE
مُمَرِّضَةً



ACCOUNTANT
مُحَاسِبًا



ACTOR
مُمَثِّلًا


ARTIST
فَنَّانًا


BAKER
خَبَّازًا


MASON
بَنَّاءً


BUTCHER
جَزَّارًا


CARPENTER
نَجَّارًا



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




COOK
طَبَّاخًا



FISHERMAN
صَيَّاد سَمَكٍ



DENTIST
طَبِيْبِ الأَسْنَانِ



POLICE
شُرْطِيًا



GARDENER
بُسْتَانِيًا



TAILOR
خَيَّاطًا



PHOTOGRAPHER
مُصَوِّرًا




SALESMAN
تَاجِرًا



BARBER
حَلَّاقًا



SAILOR
بَحَّارًا



FARMER
فَلَّاحًا



GROCER
بَقَّالًا




SMITH
حَدَّادًا



WRITER
كَاتِبًا



TRANSLATOR
مُتَرْجِمًا



JUSTICE
قَاضِيًا




LAWYER
مُحَامِيًا



PILOT
طَيَّارًا



GUARD
حَارِسًا



GATEKEEPER
بَوَّابًا



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

## *Assalamu Alaikum dear friends...*

This time I thought of sharing with my little friends something very important. You know friends it is very easy to advice someone but it is really very hard to practice them. Most of us love to advice people but when it comes to ourselves, we never pay heed to what others say. Now that I have started to write something about advice don't think I am going to talk of something big. No... I am here to expose to you all about the truth regarding fast food.

Yes!!! You heard it right. We love them isn't it?? Those cheesy burgers, hot and spicy submarines, beef kottu what else?? You all might know better than me. They are indeed lovely in appearance and absolutely delicious to taste. That feeling you get while you take a bite of a Pizza is indescribable. Some of us go to restaurants every week with our entire families only to eat these amazing fast foods.

But have we ever thought of why are these food items so yummy that we cannot let go of them even if we want to. The people in this world are so engrossed in money making that they are ready risk the lives of others for them to be happy. One such means of money making is addiction. All most all fast foods available in the market are sedated with additives that once you eat them, you get the temptation to eat them again and again. These additives are extremely dangerous for once you eat a burger or something of that sort you feel like eating that again the next day at the same time.

This is how people have become addicted to fast food and are unable to get rid of them. Due to this they suffer from various health issues at a very young age. Some of them are

- Obesity
- Heart Disease
- Lack of Family Gathering
- Irregular time of eating
- Loss of apatite
- Lack of essential nutrients
- Stress

So what will you all learn from this?? Now that I have mentioned to you the harmful effects of fast food, I hope you all will limit yourselves of eating them. Not one more than a month.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

By no means shall you attain al-birr (righteousness) until you spend (in Allaah's cause) of that which you love

[Aal 'Imraan 3:92]

# *Laugh* a while:

Two boys were arguing when the teacher entered the room.


The teacher says, "Why are you arguing?"

One boy answers, "We found a ten dollor bill and decided to give it to whoever tells the biggest lie."

"You should be ashamed of yourselves," said the teacher, "When I was your age I didn't even know what a lie was."

The boys gave the ten dollars to the teacher.

Your Corner




# Education

Education is the key that unlocks the door to all hardships of life. It is the most important aspect in people's lives. Education is becoming important than it has been in the past. Education is an essential human virtue. Human beings become human through education. It has been rightly said that without education human is a splendid slave, reasoning savage. No human beings are able to survive properly without education. Education teaches how to think, how to work, how to behave in society and how to make wise decisions. It is important in our lives.

Through education we learn many concepts that are instilled and taught to us at a very young age. It can make our dreams a reality, develop personal growth and improve quality of life. The benefits of education are endless. Without education it is hard to survive in this modern world. It develops a meaningful outlook on life.

The importance of education cannot be neglected by any nation. And in today's world the role of education has become even more vital. It is an absolute necessity for economic and social development of any nation. Education is a sign of superiority. Aristotle wrote "Educated men are as much superior to uneducated as the living to the dead".

In short education is an essential component of all human societies. "What sculpture is to a block of marble education is to the soul" says Edison. Education is the key to success. Finally, education is the essential factor which can immensely help to make us rounded personalities.

***Fathima Hasna Nazar***
***Jamiah Ayesha Sideeqa, Mawanella.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Friendship day

One day Monday went with Tuesday to see Wednesday in search of Thursday
Whether Friday has told Saturday about Sunday
That, Sunday is friendship day!!!
Friendship day is celebrated in the last Sunday of August.

**Who is a friend???**

F : Field of love
R : Root of Joy
I : Island of happiness
E : End of Sorrow
N : Name of hope
D : Dear of understanding.



***Nishadha Jaamin 2nd year***
***Islahiyya Ladies A.C.***
***Puttalam***



# Little Princess

I am Hafsa. I live in a home in Atulugama with my Mum and Dad and my little brother. My mother is a home maker. My granny looks after us and she helps my Mum. I go to Al Gazzaly Central College. I love eating fruits. If I were a princess I would live in a big palace. I would have some servants to look after me. My Mum would be a Queen and my father a King. Mom wouldn't work. I would go to school and study under a government teacher. I would wear a long dress. I will love my little life

***Fathima Hafsa 9E***
***AL Gazzaly C.C***
***Atulugama, Bandaragama.***

# Animals are our friends

There are two groups of living hemgs in the earth. They are human and animal kingdom. There are many kinds of animals living in planet. Most of them are living around. They are very helpful. They become our friends in many ways. There are animals we use as pets.

We keeps dogs for our protection, also they guard sheep and they draw carts in cold countries. Every animal has its own function in the cycle of life. They can understand us. Animals are very helpful to us. Be kind and never harm them.

***M.A. Faheema***
***Madeena National School***
***Siyambalakskotuwa***

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

**I learn every day**

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை, நாவல், கவிதை, மொழிபெயர்ப்பு மற்றும்...

| | | | |
|---|---|---|---|
| பாட நூல்கள் | Books | தட்டச்சு | Type Setting |
| நிறைவு மலர்கள் | Souvenirs | மொழித் திருத்தம் | Language Editing |
| துண்டுப் பிரசுரங்கள் | Leaflets/Flyers | ஒப்புநோக்கல் | Proof Reading |
| பதாதைகள் | Banners | வடிவமைப்பு | Designing |
| சுவரொட்டிகள் | Posters | அச்சுப் பதிப்பு | Printing |

உங்கள் சொந்தப் படைப்புகளை
உங்கள் நிறுவனங்களது தயாரிப்புகளை
அனுபவ நேர்த்தியுடன் வடிவமைத்துக் கொள்ள எம்மை நாடுங்கள்

**Publication Unit**

Just Media Foundation
77, Sri Vajiragnana Mawatha
Colombo 00900

தொடர்புகளுக்கு: 0777874984




**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. கூரிய புத்தி
2. 8
3. ஜைனப் (ரழியல்லாஹு அன்ஹா)
4. அல் முஷாரக்கா
5. முஹ்ஸின் (ரழியல்லாஹு அன்ஹு)
6. முதகல்லிமுன்
7. அரசின் அரசன்
8. நபி மூஸா (அலைஹிஸ்ஸலம்)
9. வெள்ளிக்கிழமை
10. நபி நூஹ் (அலைஹிஸ்ஸலம்), நபி இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலம்), நபி மூஸா (அலைஹிஸ்ஸலம்), நபி ஈஸா (அலைஹிஸ்ஸலம்), முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஆகியோர்.

**பொது அறிவு**

1. 42
2. முசோலினி
3. ஜப்பான்
4. சுவிட்சர்லாந்து
5. 15 வது
6. 1985 இல்
7. எயார் சிலோன்
8. 1997
9. மஹியங்கணை
20. பிரேமசிறி கேமதாஸ

## எண்ணங்களின் வண்ணங்கள் - 15

**தலைப்பு: சிறுவர் தின கொண்டாட்டம்**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 ஒக்டோபர் 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம்சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 12

## போர்த்துக்கேயர் காலப் பிரிவில் முஸ்லிம்கள்

அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்ததெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி வரை ஐரோப்பியர் கீழைத்தேய நாடுகளை அறிந்திருக்கவில்லை. கி.பி. 1498 இல் போர்த்துக்கேயரான வாஸ்கொடகாமா நன்னம்பிக்கை முனையை சுற்றி வந்து இந்து சமுத்திரத்தை அடைந்தமை கீழைத்தேய உலகின் கதவுகளை திறந்து விட்டது. இது இந்து சமுத்திரக் கடல் வணிகத்திலும் அரசியலிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியது. இந்து சமுத்திரக் கடல் வணிகம் மிக அமைதியாகவும் உயர்வாகவும் நடைபெற்று வந்த முறை மாறியது. போட்டியும் பொறாமையும் அங்கு இடம் பிடித்தன. ஐரோப்பியரின் வணிகப் பிரவேசம் இந்து சமுத்திரத்தின் வணிக, பொருளாதார, அரசியல், பண்பாட்டியல் என்பவற்றில் பாரிய தாக்கங்களை விளைவித்தது.

வாஸ்கொடகாமா இந்தியாவுக்கு வருவதற்கான கடற் பயண வழிகாட்டியாக புகழ் பூத்த முஸ்லிம் கடலோடியான இப்னுல் மாஜித் திகழ்ந்தார். இப்னுல் மாஜிதின் நூல் போர்த்துக்கேயருக்கு இந்து சமுத்திர வணிகத்துக்கு வழிகாட்டியமைக்காக அவர் மிகவும் மனம் வருந்தியதை குறித்துக் காட்டுகின்றது. போர்த்துக்கேயரின் இலங்கை வருகை ஒரு தற்செயல் நிகழ்வாகும்.

இந்து சமுத்திர வணிகத்தை தமதாக்கிக் கொள்ளும் நோக்கோடு இந்து சமுத்திரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த போர்த்துக்கேயருக்கு இலங்கையில் நுழையக் கிடைத்தமை பெரும் வெற்றியாக அமைந்தது. இந்த நோக்கோடு ஒரு கப்பல் தொகுதியுடன் கீழைத்தேய நாடுகளுக்குச் சென்று கொண்டிருந்த லோரண்ஸ் டி அல்மேடா 1505 இல் புயலில் சிக்கி காலித் துறைமுகத்தை வந்தடைந்தான். இதுவே போர்த்துக்கேயர் இலங்கையில் காலூன்றக் காரணமாக அமைந்தது. போர்த்துக்கேயரையும் அவர்களது உணவுப் பழக்க வழக்கங்களையும் பீரங்கிகளையும் கண்ட சுதேசிகள் பெரு வியப்படைந்தனர். இராஜாவலிய இந்த ஆச்சரியத்தை அப்படியே பதிவு செய்துள்ளது.

போர்த்துக்கேயர் இலங்கையில் பிரவேசித்த நேரத்தில் நாம் ஏற்கனவே குறித்துக் காட்டியதைப் போல இலங்கையின் உள்ளக நகர்களிலும் துறைமுக நகர்களிலும் முஸ்லிம்கள் வலிமை பெற்றவர்களாக இருந்தனர். முஸ்லிம் குடியிருப்புகள் செல்வச் செழிப்பு மிக்கனவாகத் திகழ்ந்தன. இதற்கு உள்நாட்டு வணிகத்திலும் ஏற்றிறக்குமதித் துறையிலும் அவர்கள் சிறப்புற்று விளங்கியமையே பிரதான காரணியாகும். யானை, முத்து, ஏலம், பாக்கு போன்ற வணிகப் பொருட்களின் ஏகபோக உரிமை முஸ்லிம்களிடமே இருந்தது. அது மட்டுமல்லாது, மன்னர்களோடு நல்லுறவு பூண்டும், அவர்களது பொருளாதார வளர்ச்சிக்கு துணையாக அமையக் கூடியவர்களாகவும் முஸ்லிம்கள் காணப்பட்டனர். எனவே, போர்த்துக்கேயர் தமது வணிக ஆதிக்கத்துக்கு எதிரான வலிமை மிக்க சக்தியாக முஸ்லிம்களைக் கருதினர். இதனால் முஸ்லிம்களின் வணிக






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலிமையை முறியடித்து அதனை முற்றிலும் தம் வசமாக்கிக் கொள்வதே போர்த்துக்கேயரின் பிர தான நோக்கமாக இருந்தது.

கி.பி. 1505 க்கும் 1509 க்கும் இடைப்பட்ட காலப் பிரிவில் இந்து சமுத்திரத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதை போர்த்துக்கேயர் தமது பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தனர். எனவே, இக் காலப் பிரிவில் இலங்கையுடனான அவர்களது தொடர்பு மிகக் குறைவாகவே இருந்தது. வருடத் துக்கு ஒருமுறை வந்து கறுவாவைப் பெற்றுச் செல்லும் நிலையே இருந்தது. கி.பி. 1517 இல் கீழைத்தேய நாடுகளில் போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொண்டனர். இதன் பிறகு இலங்கையில் நிரந்தர அரசியல், பொருளி யல் முயற்சிகளை மேற்கொள்ள முனைந்தனர். இந்த வகையில், கி.பி. 1518 இல் இலங்கையில் ஒரு கோட்டையை நிர்மாணிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அப்போதே முஸ்லிம்கள் அதன் அபாயத்தை உணர்ந்தனர். இதனை கோட்டை மன் னருக்கு உணர்த்தினர். மன்னன் முஸ்லிம்களின் ஒத்துழைப்போடும் கள்ளிக் கோட்டை மன்னன் சமொரினின் ஒத்துழைப்போடும் போர்த்துக்கே யரை நெருக்கடிக்கு உள்ளாக்கினான். இதன் விளை வாக போர்த்துக்கேயர் கி.பி. 1524 இல் அக்கோட் டையை உடைக்க முடிவு செய்ததாக பேராசிரியர் அபேசிங்ஹ குறிப்பிடுகிறார்.

கோட்டை இராச்சியத்தில் கி.பி. 1521 இல் நடைபெற்ற 'விஜயபா கொள்ளை' எனும் நிகழ்வு இலங்கையின் அரசியலில் பெரும் திருப்பு முனை யாக அமைந்ததோடு போர்த்துக்கேயர் இலங்கை யில் வலுவாக காலூன்றவும் காரணமாகியது. இந் நிகழ்வு கோட்டை இராச்சியத்தை மூன்று பிரிவு களாக பிரித்து விட்டது. 7 ஆம் விஜயபாகுவின் மூத்த புதல்வனான புவனேகபாகுவுக்கு கோட்டையும் அதற்கு அண்மித்த கடல் பகுதியும் வழங்கப்பட் டன. இரண்டாம் புதல்வரான மத்தும பண்டார வுக்கு றைகம பிரதேசமும் இளையவனான மாயா துன்னைக்கு சீதாவகை, நான்கு கோறளை, தென வக ஆகிய பகுதிகளை உள்ளடக்கி சீதாவக இராச் சியம் என்ற பெயரிலும் வழங்கப்பட்டன.



இந்த பகிர்வு முறை இலங்கையின் அரசியல் களத்துக்கு பல இன்னல்களை கொண்டு வந்தது. குறிப்பாக, மாயாதுன்னை கோட்டைப் பகுதியின் ஆதிக்கம் தனக்கு கீழ் வர வேண்டும் என விரும் பினான். மாயாதுன்னையின் அச்சுறுத்தலுக்கு அஞ் சிய புவனேகபாகு தனது ஆட்சியைப் பாதுகாத் துக் கொள்ள போர்த்துக்கேயர் உதவியை நாடினான். இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்ட போர்த்துக்கேயர்கள் முஸ்லிம்களை ஒடுக்குவதற்கு வாய்ப்பாக்கிக் கொண்டனர். கொழும்பில் வாழ்ந்த முஸ்லிம்களை வெளியேற்றுமாறு அவர்கள் மன் னனை வேண்டிக் கொண்டனர். இதனை ஏற்றுக் கொண்ட மன்னன் புவனேகபாகு முஸ்லிம்களை வெளியேற்றினான். அவ்வாறு வெளியேறிய முஸ் லிம்களுக்கு சீதாவக்கை மன்னன் மாயாதுன்னை புகலிடம் அளித்து ஆதரித்தான். சீதாவக்கை இராஜ தானியில் முஸ்லிம்கள் குடியமர்த்தப்பட்டனர்.

சீதாவக்கை அரசுக்கு உட்பட்ட பகுதிகளில் குடியேறிய முஸ்லிம்கள் மன்னன் மாயாதுன்னைக்கு மிக விசுவாசமாகவும் ஆதரவு அளிப்போராகவும் இருந்தனர். குறிப்பாக, மாயாதுன்னைக்கு பெரும் சவாலாக விளங்கிய புவனேகபாகுவுக்கும் போர்த் துக்கேயருக்கும் எதிராக அவன் மேற்கொண்ட யுத்தங்களில் பக்கபலமாக இருந்து செயற்பட்ட னர். இலங்கையின் தேசிய வரலாற்றில் மிகக் குறைவாகவே இந்நிகழ்வுகள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

இக்கால வரலாற்றில் நாம் அவதானிக்கும் மிக முக்கிய சிறப்பியல்பு இந்தியாவின் மேற்குக் கரையோர நகரங்களின் வணிகங்கள் உடனான வணிக உறவுகளாகும். தென்னிந்திய, வட இந்திய முஸ்லிம் வணிகர்களைப் போலவே மேற்குக் கரையோர முஸ்லிம் வணிகர்களுடனும் சுதேச வணிகர்கள் உறவுகளைப் பேணியுள்ளமையைக் காணலாம். குறிப்பாக, சீதாவக்கை அரசை கள்ளிக் கோட்டை முஸ்லிம் அரசோடு உறவு வைத்தமை யைக் கூறலாம். மாயாதுன்னைக்கும் கள்ளிக் கோட்டை முஸ்லிம் மன்னன் சமோரினுக்கும் இடையே ஏற்பட்ட அரசியல் உறவுகள் இதற்கான உதாரணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

ஆஷிபை ஏற்றிக் கொண்டு வந்த கார் கம்பீரமாக ஊருக்குள் நுழைந்தது. ஊர் முழுக்க அவனது புகைப்படங்களை தாங்கிய பதாகைகள் தொங்கிக் கொண்டிருந்தன. ''மாபெரும் பிரசாரகர் ஆஷிப் அவர்களை அன்புடன் வரவேற்கிறோம்'' என்று பொறிக்கப்பட்டிருந்த சுவரொட்டிகளைக் கண்டு ஆஷிபுடைய மனம் அல்லாஹ்விற்கு நன்றி கூறியது. அத்துடன் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்களையும் ஒரு தடவை அசை போட்டுப் பார்த்தது.

அன்று வெள்ளிக்கிழமை...

ஆஷிப் சுற்றும் முற்றும் பார்வையை சுழல விட்டான். கண்ணுக்கெட்டிய தூரம் யாரையும் காணவில்லை. இதுதான் தக்க சந்தர்ப்பமென கருதிக் கொண்டு மெதுமெதுவாக அடியெடுத்து வைத்து படிக்கட்டுக்களில் ஏற மேனி சிலிர்த்தது.

# அந்திமாலை விடிவெள்ளி




பாதிமா ஜஸ்ரா யாஸ்மின்
பாதிமா ஸஹ்ரா வளாகம்
ஓட்டமாவடி


சின்ன வயதிலிருந்தே தான் பெரிய அறிவிப்பாளனாக வர வேண்டும் என்பதுதான் ஆஷிபுடைய கனவு! மேடையில் கம்பீரமாக ஏறி நின்று தேன் சுளையாய் தித்திக்கும் தெள்ளிய மொழிநடையில் பேசும் தமிழ்நாட்டு தமிழறிஞர்களின் ஆற்றல் கண்டு அவன் அதிசயித்துள்ளான். அதேபோல, நம்நாட்டு அரசியல்வாதிகளும் தேர்தல் காலங்களில் பீரங்கிகளாய் மாறி அரங்கம் அதிர ஆற்றும் உரைகளைக் கண்டு அவன் மெய்சிலிர்த்துள்ளான்! தானும் வளர்ந்த பின்னர் ஒரு மாபெரும் பேச்சாளனாக வர வேண்டும் என்ற உன்னத கனவுடன் இருக்கிறான்!

அன்று மாலையில் நடக்கவிருந்த நூலக திறப்பு விழாவிற்கான ஆயத்தங்களில் ஆசிரியர்களும் மாணவர்களும் மூழ்கியிருந்தனர். அப்போது அரங்கம் காலியாக இருந்த சமயத்தில்தான் ஆஷிப் மேடையில் ஏறினான்...!

அரங்கத்தில் யாருமே இருக்கவில்லை. நிசப்தங்கள் மாத்திரமே மௌனமாக அமர்ந்து கொண்டிருந்தன. தான் முதன் முதலாக மேடை ஏறியிருப்பதை நினைத்தபோது ஆஷிபின் உள்ளம் படபடத்தது! அதுவும் கைக்கெட்டிய தொலைவில் கறுப்பு ரோஜாவாக வீற்றிருக்கும் ஒலிவாங்கியை கண்டபோது உள்ளம் குளிர்ந்தது. மனத்திரையில் பிரபல பேச்சாளர்களின் கை, கால்களால் அபிநயம் பிடித்தபடி பேசும் காட்சிகள் தோன்றி மறைந்தன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஷிப் மனதில் தைரியத்தை வரவழைத்தபடி பேசத் துவங்கினான். சில தினங்களுக்கு முன்னர்தான் இந்திய தொலைக்காட்சியல் பார்த்து லயித்த கலைஞர் கருணாநிதியின் அப்பழுக்கற்ற பேச்சை அவன் தொடர்ந்து கொண்டிருக்கும்போது பின்னால் காலடிச் சத்தம் கேட்டது.

திடுக்கிட்டு திரும்பிப் பார்க்க அங்கே பரீனா டீச்சர் நின்று கொண்டிருந்தார்.

''மாஷா அல்லாஹ்...! அற்புதமாக பேசுறீங்க! உங்கள்ட்ட இவ்வளவு திறமைகள் இருப்பது தெரியாமல் போய் விட்டதே!'' என டீச்சர் சொல்லவும் ஆஷிபின் முகம் பிரகாசமடைந்தது. ''அல்லாஹ் திறமைகளை எல்லோருக்கும் பொதுவாகத்தான் கொடுக்கிறான். அதனை ஒரு சிலர்தான் மிகச் சரியாக பயன்படுத்தி சாதனை படைக்கின்றனர். பெரும்பாலானோர் தமது பொடுபோக்கால் சராசரி மக்களாகவே இருந்துவிட்டு கடந்து செல்கின்றனர். ஆனால், நீ உனது பேச்சுத் திறமையை பயன்படுத்தி பல சாதனைகள் படைக்க வேண்டும்.''

பரீனா டீச்சரின் ஒவ்வொரு வார்த்தையும் உயிருக்குள் சென்று புத்துயிர் அளிக்க ஆஷிப் சற்று தைரியமாகவே சொன்னான்,

''எனக்கு பெரி...ய்ய்ய்...ய பேச்சாளனாக வர வேண்டும் என ஆசைதான். ஆனால்... மேடையில் ஏறினால்தான் பயம் கவ்வுகிறது.''

''பயம் எல்லோருக்கும் இருக்கும் ஆஷிப்... ஆனால், அதை விரட்டியடித்தால்தான் நாம் தலைநிமிர்ந்து வாழலாம். சரி அடுத்த வாரம் நடக்கப் போகும் தமிழ் தின விழாவில் உனது பெயரையும் பேச்சுப் போட்டியில் சேர்த்துக் கொள்கிறேன்... எதற்கும் பயப்பட தேவையில்லை... நான் உனக்கு பயிற்சி தருகிறேன்... தைரியமாக தயாராகு..!''

ஆஷிப் தயங்கவில்லை.. தைரியமாக ஒத்துக் கொண்டான்.

பரீனா டீச்சரும் தான் வாக்களித்தபடி மறுதினத்தில் இருந்து அவனுக்கு பயிற்சியளிக்க துவங்கினார்.

ஆஷிப் படபட என பேசக் கூடியவனாக இருந்தும் சில சொற்களை உச்சரிப்பதில் தவறி விடுவான். இதனை உணர்ந்து கொண்ட பரீனா டீச்சர் முதலில் அவன் அந்த சொற்களை சரியாக உச்சரிக்க பயிற்சியளித்தார். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவின் எந்த இடத்தில் தொனியை உயர்த்த வேண்டும், எங்கு தொனியை சிறு குழந்தையைப்போல தவழவிட வேண்டும் என கற்றுக் கொடுத்தார். இடைவெளி நேரங்களில் கூட பரீனா டீச்சர் தன் ஓய்வை தியாகம் செய்துவிட்டு ஆஷிபை மேடையில் ஏற்றி பேச கற்றுக் கொடுத்தார்!

உலகின் பிரபலமான பேச்சாளர்களின் வீடீயோக்களை அவனுக்கு காண்பித்து புதுப்புது நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்தார்! பிரபல பேச்சாளர்கள் சபையோரின் கவனத்தை தம்பால் கவர்ந்திழுக்க இரண்டு வகையான உத்திகளைக் கையாள்வார்கள். தமது தலைப்பு சம்பந்தமான புள்ளிவிபரங்களை அள்ளிக் குவிப்பார்கள் அல்லது மக்களின் மனதில் ஊடுருவக் கூடிய சுவாரஷ்யமான கதைகளை சொல்வார்கள். பரீனா டீச்சர் இந்த இரண்டு வகையான உத்திகளையும் அவனுக்கு கற்றுக் கொடுத்தார். சோர்வடையாமல் தேடலில் மூழ்கும் ஒருவனால்தான் பேச்சுலகில் எப்போதும் கதாநாயகனாக உலா வர முடியும் என அவனுக்கு உணர்த்தினார்.

நாட்கள் படிப்படியாக நகர்ந்து கொண்டிருந்தன. தமிழ் தின பேச்சுப் போட்டியும் வந்தது. தன் பெயர் அழைக்கப்பட்டபோது ஆஷிப் முழு நம்பிக்கையுடன் மேடையில் ஏறினான்.

அரங்கம் முழுதும் மாணவர்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. எல்லோருடைய பார்வையும் ஆஷிப் மீதே குவிந்திருந்தது. நடுவர்களின் முகங்களை பார்த்தபோது இத்தனை நேரமாய் கட்டிக் காத்து வந்த தைரியம் எல்லாம் சிதறிப் போகத் துவங்கியது. ஆனாலும், சற்றுத் தொலைவில் நின்று கொண்டிருந்த பரீனா டீச்சரின் வதனம் கண்டபோது புத்துணர்ச்சி வரவே ஆஷிப் பேசத் துவங்கினான். சந்தேகமே இல்லை... முதலிடம் அவனுக்குத்தான். அவன் பேசிய அழகையும் லாவகத்தையும் கண்ட நடுவர்கள் தனித் தனியாக வந்து பாராட்டிச் சென்றனர்.

முதன் முதலாக பெற்ற வெற்றி. அதுவும் முதலாவதாக வந்த வெற்றி. ஆஷிப் எனும் மாணவனை அத்தனை காலமாக கட்டிப் போட்டிருந்த அத்தனை பயங்களும் தயக்கங்களும் சிதறிச் சின்னாபின்னமாகி விட்டன. அதன் பின் ஆஷிப் பயப்படவில்லை.


**29 ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாதனையாளர்களை உருவாக்குவதையும் உருவாகும் சாதனையாளர்களை ஊக்குவிப்பதையும் அகரம் தன் முக்கிய பணியாக மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் சாதனை மாணவன் ஒருவரை இம்மாத அகரம் இதழ் அறிமுகம் செய்கின்றது. கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் உயர் தரத்தில் உயிரியல் தொழிநுட்ப பிரிவில் கல்வி பயிலும் சாதனை மாணவன் ஸவ்பாத் சூரிய சக்தி மூலம் இயங்கும் இரசாயன விசிறல் இயந்திரமொன்றை உருவாக்கியுள்ளார். அவருடன் அகரம் சஞ்சிகை மேற்கொண்ட கலந்துரையாடலை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.



# இடைவிடாத தேடல் இணையற்ற வெற்றியை தேடித் தரும்!

✍ வ. முஹம்மத் நபீல் / ஏ. முஹம்மத் பாயிஸ்

**அகரம்:** உங்களைப் பற்றிய அறிமுகம் ஒன்றைத் தாருங்கள்?

**ஏ.எம்.எம். ஸவ்பாத்:** எனது குடும்ப உறுப்பினர்கள் ஆறு பேர். தந்தையாகிய அப்துல் மஜீத் வியாபாரம் செய்கின்றார். இளையவர்களாக மூன்று சகோதரர்கள் இருக்கின்றார்கள். நான் ஐந்தாம் வகுப்புவரை GMMS பாடசாலையிலும் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை அல்ஹிலால் வித்தியாலயத்திலும் அதன் பின் கல்முனை ஸாஹிராவிலும் கல்வியைத் தொடர்ந்து வருகிறேன்.

**அகரம்:** உங்களது கண்டுபிடிப்புக்களைப் பற்றிக் கூறுங்கள்?

**ஏ.எம்.எம். ஸவ்பாத்:** எனது முதலாவது கண்டுபிடிப்பு மா அரிக்கும் இயந்திரமாகும். மூன்று மாத முயற்சியின் பின்னால் 2015.10.20 அன்று இக்கண்டுபிடிப்பை பூர்த்தி செய்தேன். குறைந்த நேரத்தில் குறைந்த செலவில் இந்த இயந்திரம் எளிதாக பெறக் கூடிய கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி வெறும் நூறு ரூபா செலவிலேயே இந்த இயந்திரத்தை என்னால் தயாரிக்க முடியுமாக இருந்தது, அல்ஹம்துலில்லாஹ்.

**அகரம்:** இந்த கண்டுபிடிப்புக்கு சமூகத்தில் உரிய அங்கீகாரம் கிடைத்ததா?

**ஏ.எம்.எம். ஸவ்பாத்:** திருப்திப்படும் அளவு இதற்கு அங்கீகாரம் கிடைத்தது. பல பாராட்டுக்களும் பரிசில்களும் என்னை ஊக்கப்படுத்தும் இலக்குடன் நாலா புறங்களிலும் வந்து குவிந்தன.

இலங்கை கண்டுபிடிப்பாளர் ஆணைக்குழுவால் பரிசில்களும் பாராட்டுக்களும் கிடைத்தன. சாய்ந்தமருது விதாதா வள நிலையத்தினால் பாராட்டுக்களும் சான்றிதழும் கிடைத்தன. தேசிய இளைஞர் கழகத்தினால் நடத்தப்பட்ட The Talent போட்டியிலும் என்னால் வெற்றி பெற முடியுமாக இருந்தது. கொழும்பு ஆனந்தா கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய மட்ட புத்தாக்க போட்டி, இலங்கை புத்தாக்க ஆணைக்குழுவால் நடாத்தப்பட்ட தேசிய மட்ட போட்டி, இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட போட்டி போன்றவற்றிலும் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

இரண்டாவது கண்டுபிடிப்பு எனது அடுத்த கட்ட நகர்வாக அமைந்தது. விவசாயிகளுக்கு உறுதுணையாக அமையும் வகையில் சூரிய சக்தியை பயன்படுத்தி இரசாயனம் விசிறல் இயந்திரமொன்றை கண்டுபிடித்தேன். சுமார் நான்கு மாத முயற்சியின் பின்னால் கண்டுபிடித்த இந்த இயந்திரத்தை உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தும் நிகழ்வு 2016.08.31 ஸாஹிரா கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலுக்கு அச்சுறுத்தலாக அமையும் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இந்த இயந்திரத்தின் உற்பத்திச் செலவு குறைவானது. அதேவேளை, விவசாயிகளுக்கு சௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் இவ்வியந்திரம் பாரம் குறைந்தது. அத்துடன், குறைந்த நேரத்தில் அதிக பரப்பான பயிர் நிலங்களுக்கு இதனைப் பயன்படுத்தி இரசாயனங்களை விசிறவும் முடியும்.

**அகரம்:** அறிவியல் கண்டுபிடிப்பு என்ற அற்புதமான துறைக்குள் நீங்கள் எவ்வாறு நுழைந்தீர்கள்? இத்துறையில் உங்களுக்கு எந்தளவு ஈடுபாடு உள்ளது?

**ஏ.எம்.எம். ஸவ்பாத்:** அறிவியல் கண்டுபிடிப்பு என சுருக்குவதை விட அறிவுத் தேடலில் ஈடுபாடு உள்ளது. வழமையான நாட்களில் சுமார் 1-2 மணித்தியாலங்கள் வாசிப்பில் ஈடுபடுகிறேன். பொது அறிவு தகவல்களைத் தேடி சுவாரஷ்யமாக வாசிப்பது எனது வழமையாக உள்ளது. அதேபோல, எனது ஆய்வுப் பொருட்களுடன் புதிய தேடலில் ஈடுபவதிலும் எனது பெரும்பாலான நேரம் செலவாகின்றது.

**அகரம்:** அடுத்த இலக்கு என்ன?

**ஏ.எம்.எம். ஸவ்பாத்:** எனது கல்வி வாழ்வின் முக்கிய மைல்கல்லான க.பொ.த. (உ/த) உள்ளது. அதனை வெற்றிகரமாக கடந்த பின்னர் எனது அடுத்த கண்டுபிடிப்பில் இறங்குவது அனைத்து வகையிலும் ஆரோக்கியமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

அதேவேளை, கறுவாப்பட்டை உரிக்கும் இயந்திரமொன்றை கண்டுபிடிப்பதும் எனது அடுத்த இலக்காக உள்ளது. கறுவா தொழில் இலங்கையின் பாரம்பரிய தொழிலாக காணப்பட்ட போதும் அதன் மூலம் இலங்கைக்கு பாரிய அந்நிய செலாவணி பெறப்பட்ட போதும் இதுவரை ஏன் கறுவாப்பட்டை உரிக்கும் இயந்திரம் ஒன்றைக் கண்டு பிடிக்கப்படவில்லை என்ற விசனமே எனது இந்த இலக்கிற்கான காரணமாகும். அத்துடன், மக்களுக்கு பயன்படும் வகையில் பல கண்டுபிடிப்புக்களை செய்து சர்வதேச மட்ட போட்டிகளுக்கு செல்ல வேண்டும் என்பதனையும் எனது தூர இலக்காக அமைத்திருக்கிறேன். உயிரியல் துறையில் எனது மேற்படிப்பைத் தொடர வேண்டும் என்ற இலக்கும் எனக்கு உண்டு.

**அகரம்:** இந்த கண்டுபிடிப்பு பயணத்தில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் பற்றிச் சொல்ல முடியுமா?

**ஏ.எம்.எம். ஸவ்பாத்:** சொல்லப்போனால் சவால்கள் என குறிப்பிடும்படியாக எதுவும் இல்லை. பெரும்பாலும் அனைவரும் ஆதரவளித்தார்கள்; ஊக்குவித்தார்கள்.

**அகரம்:** இந்த சாதனைப் பயணத்தில் முக்கிய காலகட்டத்தில் நிற்கும் நீங்கள் யாருக்கு நன்றி சொல்ல விரும்புகின்றீர்கள்?

**ஏ.எம்.எம். ஸவ்பாத்:** ஆற்றல்களைத் தந்த அல்லாஹ்விற்கே அனைத்துப் புகழும். எனது ஒவ்வொரு சாதனையும் அவனது அருள்தான். அடுத்து, அவனது மிகப் பெரும் அருளான எனதன்பு பெற்றோர். என்னை துவழ விடாது தொடர்ந்து ஊக்கமூட்டி என் சாதனைக்கு அடிப்படைக் காரணியாக அவர்கள் இருக்கின்றார்கள்.

நன்றி சொல்ல வேண்டியவர்களின் பட்டியல் நீளமானது. அதில் முக்கிய இடம் எனது கல்லூரி அதிபர் பீ.எம்.எம். பதுறுதீன், பகுதித் தலைவர் ஏ. ஆதம்பாவா எனது வகுப்பாசிரியை திருமதி எஸ். கஜேந்தினி அத்துடன் ஊடகங்கள் மூலம் என்னுடைய கண்டுபிடிப்பை பிரபலப்படுத்த உதவிய சிரேஷ்ட ஆசிரியர் எம்.ஐ.எம். அஸ்ஹர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எனது கண்டுபிடிப்பு பயணத்தில் எனது இளைய சகோதரனின் பங்கு முக்கியமானது. எங்களது கலந்துரையாடல்கள் பெரும்பாலும் எங்களது ஆய்வைப் பற்றியே அமைந்திருக்கும். எனது கண்டுபிடிப்புக்களின் பின்னால் அவரது ஒத்துழைப்பும் உள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெதர்லாந்து
## Netherland


வடமேற்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள நாடுகளில் நெதர்லாந்து பிரபலமானது. வரலாற்றில் சில காலப் பகுதிகளில் இந்நாடு ஒல்லாந்து என்ற பெயரால் அழைக்கப்பட்டாலும் ஒல்லாந்து எனப்படுவது நெதர்லாந்தின் ஒரு பகுதி மாத்திரமே! பெல்ஜியம், ஜேர்மனி மற்றும் வட கடல் போன்றவை நெதர்லாந்தின் புவியியல் எல்லைகளாகும். நெதர்லாந்தின் சில தீவுகள் கரீபியன் கடலில் அமைந்துள்ளன.



அரசி
வில்லியம் அலெக்சாந்தர்



பிரதமர்
மார்க் ரூட்டே



தேசிய பறவை
Limosa limosa

### புவியியல்

நெதர்லாந்தின் 25% பகுதி கடல் மட்டத்திற்கு கீழே அமைந்துள்ளது. இப்பகுதிகளில் 21% மக்கள் வாழ்கின்றனர். மேலும், 50 வீதமான நிலம் கடல் மட்டத்திலிருந்து 1 மீற்றருக்கு குறைவான உயரத்தில் அமைந்துள்ளது. டச்சு மொழி உட்பட ஏனைய பல ஐரோப்பிய மொழிகளில் நெதர்லாந்து என்றால் தாழ்நிலப் பகுதி என அர்த்தமாகும்.


| | |
|---|---|
| தலைநகரம் | - ஆம்ஸ்டர் டாம் |
| ஆட்சி மொழி | - டச்சு |
| விடுதலை | - 26 ஜுலை 1958 (போரின் பின்னால் ஹாப்ஸ்புர்க் பேரரசிடம் இருந்து) |
| பரப்பு | - 41,543 $Km^2$ |
| நீர் பகுதி | - 18.41% |
| மக்கள் | - 16,847,007 |
| சன அடர்த்தி | - 406 $Km^2$ |

### கௌரவ வரலாறு

உலக நாடுகளைக் கைப்பற்றி ஆண்ட நாடுகளில் நெதர்லாந்தும் முக்கிய பங்கை வகிக்கிறது. பல ஆசிய நாடுகளில் தனது ஆதிக்கத்தைப் பரப்பிய ஒல்லாந்து தன் சிந்தனை, கலாசார, மொழி என்பனவற்றின் தாக்கங்களையும் விட்டுச் சென்றுள்ளது.

### மக்கள்

பெரும்பாலும் ஒல்லாந்து இனத்தவர்களே வாழ்கின்றனர். இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து ஆசிய, ஆபிரிக்க மக்களும் இங்கு குடியேறியுள்ளனர். அதிகளவு சனத்தொகை கொண்ட நாடுகளில் நெதர்லாந்தும் ஒன்றாகும்.



தேசிய கொடி




நாணயம்

### அரசியல்

பெயரளவு அதிகாரம் மன்னரிடமும் உண்மையான அதிகாரம் மக்களவையிடமும் காணப்படுகிறது. ஒற்றையாட்சி முறை பின்பற்றப்படுகிறது.

### விளையாட்டு

கால்பந்து, ஹொக்கி பிரபலமான விளையாட்டுக்கள். கால்பந்தில் ஒரு முறை ஐரோப்பிய கிண்ணத்தையும் மூன்று முறை உலக போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் பிடித்துள்ளது. ஹொக்கி போட்டிகளில் உலகளவில் மூன்று தடவை சம்பியன் பட்டங்களையும் ஒலிம்பிக்கில் 2 தங்கப் பதக்கங்களையும் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




✍ தொகுப்பு: வ. முஹம்மத் நபீல்

## ஐ.நா. பொதுச் சபையில் ஜனாதிபதி உரையாற்றினார்

ஐ.நா. பொதுச் சபையின் 71 ஆவது கூட்டத் தொடரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார். அமெரிக்க நியூயோரக் நகரில் இடம்பெற்ற இம்மாநாட்டில் ஜனாதிபதி உரை யாற்றினார். ஐ.நா. பொதுச் சபையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றியுள்ள இரண் டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

## பல்கலைக்கழக நுழைவு 10 வீதத்தால் அதிகரிப்பு

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையின் பிரகாரம், பல் கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான வெட் டுப் புள்ளியினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. இதன் பிரகாரம் இவ்வருடம் 27,603 மாணவர்கள் பல்கலைக்கழ கத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். இது கடந்த கல்வியாண்டுடன் ஒப்பிடுகையில் 10 வீத அதி கரிப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் சர்வதேச தகவலறியும் மாநாடு

கடந்த செப்டெம்பர் மாதம் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் சர்வதேச தகவலறியும் தினத்தை முன் னிட்டு கொழும்பில் ஜனாதிபதி தலைமையில் சர்வதேச மாநாடொன்று நடைபெற்றது. ஊடகத் துறை அமைச்சு மற்றும் அரசாங்கத் தகவல் திணைக் களம் ஏற்பாடு செய்த இந்த மாநாடு தகவல் அறிதல் மற்றும் ஊடக மறுசீரமைப்பு என்ற தொனிப் பொருளில் நடைபெற்றது. விசேடமாக தகவல் அறியும் செயற்பாட்டில் பிராந்திய அனுபவங் களைப் பெற்றுக் கொள்ளுதல், தொழிநுட்ப பரி மாற்றம் ஆகியன இந்த மாநாட்டின் நோக்கங்களா கும். குறிப்பாக, இந்தியா, பாகிஸ்தான், பங்களா தேஷ் உள்ளிட்ட நாடுகளின் அனுபவங்கள் இதன் போது பரிமாறப்பட்டன.

## அணிசேரா இயக்கத்தின் 17 ஆவது உச்சி மாநாடு

அணிசேரா இயக்கத்தின் 17 ஆவது உச்சி மாநாடு, வெனிசுலா நாட்டின் மார்கரிட்டா தீவில் செப் டெம்பர் 17, 18 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இம்மாநாடு இவ்வியக்கத்தின் பொதுச் செயலா ளர் நிகலஸ் மடரோவின் தலைமையில் நடை பெற்றது. அணிசேரா இயக்கம் கடந்த 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அணிசேரா இயக்கத் தில் 120 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. 16 ஆவது உச்சி மாநாடு 2012 ஈரானில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் உலக வங்கித் தலைவர் ஆகிறார் ஜிம் யோங் கிம்?

உலக வங்கித் தலைவர் பதவிக்கு வேறு யாரும் விண்ணப்பிக்காத நிலையில், மீண்டும் 2 ஆவது முறையாக உலக வங்கித் தலைவராக ஜிம் யோங் கிம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. உலக வங்கித் தலைவராக ஜிம் யோங் கிம் (56) 2012 ஆம் ஆண்டு தேர்ந் தெடுக்கப்பட்டார். இவரது பதவிக் காலம் வரும் 2017 ஜூன் 30 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. ஆனால், அவருக்குப் போட்டியாக இதுவரை யாரும் விண்ணப்பிக்கவில்லை. இந்நிலையில், உலக வங்கித் தலைவர் பதவிக்கு மீண்டும் ஜிம் யோங் கிம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளதாக தகவல் கள் வெளியாகி உள்ளன. இது குறித்து உலக வங்கி நிர்வாகக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இரண்டாவது உலகப் போருக் குப் பின்னர், உலக வங்கி உருவாக்கப்பட்டதிலி ருந்து உலக வங்கியின் தலைவராக அமெரிக்கர் களே இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிட்சர் பரிசு பெற்ற அமெரிக்க நாடக ஆசிரியர் காலமானார்

எழுத்துத் துறைக்கு வழங்கப்படும் உலகின் மிக உயரிய புலிட்சர் பரிசை மூன்று முறை பெற்ற ஆங்கில நாடக ஆசிரியரான எட்வர்ட் எல்பி தனது 88 ஆவது வயதில் அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் காலமானார். இவர் 1967, 1975, 1981 ஆம் ஆண்டுகளில் அடுத்தடுத்து மூன்று புலிட்சர் பரிசுகள் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## உலகின் மிகப் பெரிய சுகாதார நோய் தற்கொலை

உலகின் மிகப் பெரிய சுகாதார நோயாக 'தற்கொலை' அடையாளம் காணப்பட்டுள்ளது. ஒவ்வொரு 40 செக்கனுக்கு ஒருவர் வீதம் தற்கொலை செய்து கொள்கின்றனர். வருடமொன்றுக்கு 800,000 தற்கொலைகள் இடம்பெறுகின்றன.

இலங்கை தற்கொலை செய்வோரின் தரவுப் பட்டியலில் 22 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. 3000 பேர் இலங்கையில் வருடாந்தம் தற்கொலை செய்து கொள்கின்றனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாகும். செப்டெம்பர் 14 உலக தற்கொலை தடுப்பு தினம் என்பதும் குறிப்பிடத் தக்கது.

## தாய்லாந்தில் 200 பேருக்கு சிகா வைரஸ்

ஜனவரி தொடங்கி செப்டெம்பர் வரை 200 பேர் தாய்லாந்து நாட்டில் சிகா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. ஆகஸ்ட் 27 ஆம் திகதி சிங்கப்பூரில் முதன் முறையாக சிகா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. ஆகஸ்ட் தொடங்கி இதுவரை சுமார் 300 பேர் சிங்கப்பூர் நாட்டில் சிகா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். மலேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளும் சிகா வைரஸ் தொற்றால் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## ஐந்தாவது முறையாக அணுகுண்டு பரிசோதனை!

சர்வதேச எதிர்ப்புகள் மற்றும் பொருளாதார தடைகளைப் பற்றி கவலைப்படாத வடகொரியா ஐந்தாவது முறையாக அணுகுண்டு பரிசோதனை செய்துள்ளதாக தென்கொரியா குற்றம் சாட்டியுள்ளது. கிழக்காசிய கண்டத்தின் கொரிய தீபகற்பத்தில் அமைந்துள்ள முக்கிய நாடான வடகொரியா, கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகிறது. இருப்பினும், கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் எதிர்ப்பினை பொருட்படுத்தாமலும் சர்வதேச ஒப்பந்தங்களை புறக்கணித்தும் அணு ஆயுத சோதனைகளை வடகொரியா தொடர்ந்து நடத்தி வருகிறது.

## வரலாற்றில் முதல் தடவையாக...

ஒக்டோபர் மாதம் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியூஸிலாந்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக நியூஸிலாந்து பிரதமர் ஜோன் கீ உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். இலங்கை பிரதமர் ஒருவர் நியூஸிலாந்துக்கு செல்லும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

## சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு!

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஆகஸ்ட் மாதம் இலங்கை வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஓர் இலட்சத்து எண்பத்தாறாயிரத்துக்கும் அதிகமாகும். 2015 ஆகஸ்ட் மாதத்துடன் இத்தொகையினை ஒப்பிடுகையில் இது 15 சதவீத வளர்ச்சியாகும். இவ்வருடத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பதின் மூன்று இலட்சத்துக்கும் அதிகமாகும். கடந்த வருடத்துடன் இத்தொகையை ஒப்பிடுகையில் இது 16 வீத அதிகரிப்பாகும் என்று அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சிறுவர் தினம்



சிறுவர்களுக்கு எதிரான அநீதிகளை இல்லா தொழித்து அவர்களுக்குத் தேவையான சகலவித மான உரிமைகளையும் பெற்றுக் கொடுக்க வழி செய்வதே ஒக்டோபர் 01 ஆம் திகதி சிறுவர் தினம் கொண்டாடப்படுவதற்கான காரணமாகும்.

'நாளைய தலைவர்கள்' என வர்ணிக்கப்படும் இளைய தலைமுறையைப் பாதுகாப்பது சம்பந்த மாக உலக வரலாற்றில் பல உடன்படிக்கைகளும் பிரகடனங்களும் வெளியிடப்பட்டுள்ளன. அவற் றில் குறிப்பாக, சிறுவர்கள் போர்களில் பயன்படுத் தப்பட்ட காலத்தில் போருக்கு விரும்பி வந்த சிறு வர்களை திருப்பி அனுப்பிய ரஸூலுல்லாஹ்வின் செயல் உலகிற்கு மிகப் பெரிய முன்மாதிரியாகும்.

சிறுவர் தொடர்பான சமவாயம் 1989.11.20 ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபையில் ஏற்றுக் கொள்ளப் பட்டது. 54 உறுப்புரைகள் காணப்படும் இச்சம வாயத்தில் இலங்கை 1991 ஆம் ஆண்டு கையெ ழுத்திட்டது.

சிறுவர் உரிமைகள் பற்றிய உறுப்புரைகள் நான் காக பிரிகின்றன.

1. உயிர் வாழ்வதற்கான உரிமை
2. அபிவிருத்திக்கான உரிமை
3. பங்குபற்றுவதற்கான உரிமை
4. பாதுகாப்பிற்கான உரிமை

18 வயதிற்கு உட்பட்ட அனைவரும் சிறுவர் கள் என அடையாளப்படுத்தப்படுகின்றனர். அவர்களின் உரிமைகளை வழங்குவதும் துஷ்பிர யோகங்களில் இருந்து அவர்களைப் பாதுகாப்ப தும் எம் அனைவரது கடமையாகும்.

---

## சிறுகதை...

**23 ஆம் பக்கத் தொடர்...**

*தைரியமாக அனைத்து போட்டிகளிலும் கலந்து கொண்டான். பரீனா டீச்சரும் அலுக்காமல், சளைக்காமல் அவனை அனைத்து போட்டிகளுக்கும் அழைத்துச் சென்றார்! எதிர்பாராமல் அவன் சில போட்டி களில் தோற்றபோது அவன் துவண்டு போகாமல் அவனை உற்சாகப்படுத்தி ஊக்கமூட்டினார்.*

*காலம் உருண்டோடியது. ஆஷிப் தான் கனாக் கண்டதுபோல மிகப் பெரும் பேச்சாளனாக மாறினான். நாடு முழுக்க அவனது புகழ் பரவியது. பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் அவனது பேட்டிகளை போட்டி போட்டுக் கொண்டு பிரசுரித்தன. இந்த நிலையில்தான் தன் சொந்த ஊருக்கு சொற்பொழிவொன்றை ஆற்ற அவன் அழைக்கப்பட்டிருந்தான்.*

*அவனை ஊருக்கு அழைத்த சந்தர்ப்பத்தில் ஆஷிப்பிற்கு இதைவிட பல முக்கியமான வேலைகள் இருந்தன. ஆனாலும், ஊருக்கு சென்றால் தன் பரீனா டீச்சரை பார்க்க முடியும் என்பதால் உடனடியாக ஒத்துக் கொண்டான்.*

*பரீனா டீச்சரின் வீடு பூட்டிக் கிடந்தது. பாடசாலைக்கு போய் விட்டதாக பக்கத்து வீட்டிலிருந்து எட்டிப் பார்த்து சொன்னார்கள். சரி அங்கே போய் பார்த்துவிட்டு வரலாம் என ஆஷிப் புறப்பட்டான்...*


*பரீனா டீச்சர் எவ்வளவு அற்புதமான மனிதர். பற்றைக் காடுகளுக்குள் மறைந்து கிடக்கும் பாறாங்கல்லை தேடிப் பிடித்து செதுக்கி சிற்பமாக்கும் உன்னத சிற்பியைப்போல எங்கோ உலவிக் கொண்டிருந்த தன்னை தேடிப் பிடித்து பயிற்சி தந்து இன்று எவ்வளவு பெரிய சாதனையாளனாக மாற்றி விட்டிருக்கிறார். இந்த தியாகங்களுக்காக அவர் பிரதியுபகாரமாக தன்னிடமிருந்து எதனையுமே எதிர்பார்க்கவில்லை. தன் மாணவன்தான் ஆஷிப் என பெருமைப்பட்டாரே தவிர, தான்தான் அவனை உருவாக்கியது என ஊரில் கர்வத்துடன் சொல்லித் திரியவில்லை.*

*பாடசாலைச் சுவர்களைத் தாண்டி பரீனா டீச்சரின் குரல் கேட்டுக் கொண்டிருந்தது. ஆஷிப் மெதுவாக எட்டிப் பார்க்க தன் முன்னால் கைகட்டி நின்று கொண்டிருந்த மாணவனுக்கு பரீனா டீச்சர் கம்பீரமாக சொல்லிக் கொண்டிருந்தார்.*

*''உன்னிடம் அற்புதமான எழுத்தாற்றல் இருக்கிறது... இவற்றை நீ முறையாக பயன்படுத்தினால் அற்புதமான எழுத்தாளனாக வரலாம். சோம்பலை விட்டுவிடு. நாளை முதல் உனக்கு பயிற்சி தருகிறேன்... நீயும் சாதிக்க தயாராகு!''*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்

**பாடம் 07**

## சொல்முறைப்படுத்தல் மென்பொருள் (Microsoft word) பற்றி அறிந்து கொள்வோம்



பயனரின் பல்வேறுபட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்காக பல்வேறு மென்பொருட்கள் நிறுவனங்களாலும் தனிநபர்களாலும் உருவாக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் செயற்திறன், இலகு தன்மை, பல்வேறுபட்ட வாய்ப்புக்கள் (Multiple Options) மற்றும் பிரபல்யம் என்பவற்றின் அடியாக அம்மென்பொருட்கள் பயனர்களின் மனம் கவர்ந்து பல ஆண்டு காலம் செயற்பாட்டில் இருக்கின்றன. இன்னும் பல மென்பொருட்கள் அடையாளமே இன்றி மறைந்து செல்கின்றன.


கணினித்துறையின் வளர்ச்சியில் பல நிறுவனங்கள் பாரிய பங்களிப்புக்களைச் செய்திருக்கின்ற பொழுதும் படித்தவர் தொடக்கம் பாமரர் வரை அனைவர் மத்தியிலும் நன்மதிப்பையும் அங்கீகாரத்தையும் பெற்று இயங்கி வரும் நிறுவனமாக Microsoft நிறுவனம் திகழ்கின்றது.

இந்நிறுவனம் கணினிகளுக்கான முறைமை மென்பொருட்களை (System software) உற்பத்தி செய்தது. Microsoft Windows என அனைவராலும் அறியப்பட்ட முறைமை மென்பொருட்களை இந் நிறுவனம் உலகிற்கு வழங்கியது. அத்துடன், கணினிப் பயனர்களின் தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன் பல செயற்பாட்டு மென்பொருட்களையும் (Application Software) இந்நிறுவனம் உருவாக்கியது. அவ்வாறு உருவாக்கப்பட்ட செயற்பாட்டு மென்பொருட்களில் ஒன்றான Microsoft word பற்றி இன்று நாம் அறிந்து கொள்வோம்.


*படி 01*

எமது கணினியில் Install செய்யப்பட்ட இம் மென்பொருளை Open செய்து கொள்வதற்கு பின் வரும் முறையினை பின்பற்ற வேண்டும்:

கணினியில் உள்ள Start பட்டனை அழுத்தி அதிலுள்ள All Program என்பதில் Microsoft Office என்பதைத் தெரிவு செய்து அதில் Microsoft word என்பதை Click செய்ய வேண்டும்.



(படம் 01)



(படம் 02)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 02


மென்பொருள் எமது கணினித் திரையில் காட்சிப்படும் விதம் படம் 02 இல் காட்டப்பட்டுள்ளது. அதில் முக்கியமாக Quick Access Toolbar, Tabs, Office Button, Ribbon, view button, ruler, insertion point, paragraph mark என்பன காட்டப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றினாலும் வெவ்வேறுபட்ட பணிகள் நடைபெறுகின்றன.

படி 03


(படம் 03)

Microsoft word மென்பொருளானது கடிதங்கள், கட்டுரைகள் மற்றும் ஆக்கங்கள் என்பவற்றை எழுதுவதற்கு மிகவும் உகந்தது. இதற்காக எமக்கு புதிய ஒரு document ஒன்றைத் திறந்து கொள்ள வேண்டும். எனவே, படம் 03 இல் காட்டப்பட்டுள்ளது போன்று office பட்டனை அழுத்தி New என்ற பகுதியை click செய்ய வேண்டும்.

படி 0⁴




(படம் 4)

இப்போது புதிய Document ஒன்றைத் திறந்து கொள்வதற்கான Dialog box திறந்திருக்கும். அதில் Microsoft நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட நவீன வடிவங்கள் உதாரணங்களுக்காக காட்சிப் படுத்தப்பட்டிருக்கும். நாம் பாவிக்கும் Ms.office அந்நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தால் மாத்திரமே இவை எமது கணினியில் பெற்றுக் கொள்ள முடியும். அல்லது வெறுமையான புதிய Document ஒன்றை திறந்து கொள்ள முடியும்.


படி 05

இப்போது திறந்திருக்கும் மென்பொருளினைப் பற்றி அறிந்து கொள்வோம்.



(படம் 05)

- Tab வகைகளில் Home, Insert, Page layout, Reference, Mailings, Review, Vie என பல வகைகள் காணப்படுகின்றன. படம் 05 இதனை விளக்குகின்றது.
- அதேநேரம், நாம் பயன்படுத்தும் documents இல் Ruler, Document map, Gridlines, Thumbnails என்பவற்றை வைத்துக் கொள்ள அல்லது நீக்கி விட check box என்ற பெட்டியை click செய்ய வேண்டும். (படம் 05)



(படம் 06)

- கிடையாகவும் செங்குத்தாகவும் உள்ள அடிமட்டத்தினை எமக்கு பயன்படுத்தலாம். நாம் தட்டச்சிடும் எழுத்தின் ஆரம்ப இடம், பந்திகளின் ஆரம்ப இடம், இரண்டாவது இடம், Tab களின் அளவுகள் என்பன இந்த அடிமட்டத்தைக் கொண்டு இலகுவில் தீர்மானித்துக் கொள்ள முடியும். (படம் 05)
- இன்னும், மென்பொருளில் ஒவ்வொரு Tab களின் கீழ் பல Group கள் காணப்படுகின்றன. Home எனும் Tab இன் கீழ் Clipboard, Font, Paragraph, Styles, Editing போன்ற Group களும் Insert என்ற Tab இல் Pages, Tables, Illustrations, Links, Header&Footer, Text, Sybols போன்ற Group களும் காணப்படுகின்றன. (படம் 06,07)


(படம் 06)

- ஒவ்வொரு Group இலும் பல்வேறு buttons காணப்படுகின்றன. படம் 06 இல் Paragraph இல் Paragraph Show / hide பட்டுன் காட்டப்பட்டுள்ளது.
- அந்த குறிப்பிட்ட பட்டுனை அழுத்தும்போது சொல்முறைப்படுத்தல் மென்பொருளின் செயலட்டையில் (Worksheet) அதன் அடையாளம் காணப்படுவதை அவதானிக்கலாம்.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தின் மத்தியில் ஒரு நந்தவனம்

தொடர்ந்து படிக்க முடியவில்லை; சலிப்பாக உள்ளது. காரணம் தெரியாத கவலைகள் மனதை அரிக்கின்றன. கல்வியில் கவனத்தை ஒன்று குவிக்க முடியவில்லை.

வாழ்வில் வெற்றி பெற ஆசைதான். சாதிக்க வேண்டும். ஆனால், முடிவெடுக்க முடியாமல் சிரமப்படுகிறேன்.

மனம் உறுதியில்லை! அற்ப காரணங்களுக்காக கலங்கி விடுகிறது.

இவ்வாறெல்லாம் உங்கள் உள்ளம் தத்தளிக்கின்றதா? குமுறுகின்றதா? உங்களை உங்கள் உள்ளமே குறை கூறுகின்றதா? அவ்வாறென்றால், உங்கள் மனதின் ஆரோக்கியம் பற்றி நீங்கள் மீள்பரிசீலனை செய்ய வேண்டிய தருணம் இது!

**வ. முஹம்மத் நபீல்**

அழகான ஒரு நந்தவனத்தை உங்கள் மனக்கண் முன் கொண்டு வாருங்கள்! இளந்தென்றல் மௌனமாக உலா வந்து கொண்டிருக்கும்! வர்ணமயமான மலர்களாலும் சிறு கொடிகளாலும் பசுமை விரிந்திருக்கும்! உயர்ந்த மரங்களின் அடியில் மெது மெதுவாக நிழல்கள் நகர்ந்து கொண்டிருக்கும்...! சல சல என சிறு சங்கீதத்துடன் நீரோடைகள் பயணித்துக் கொண்டிருக்கும்! இதேபோல எமது உள்ளமும் அழகாகவும் அமைதியாகவும் இருந்தால் எவ்வளவு அற்புதமாக இருக்கும்...!

எமது வாழ்வின் நொடிகள் புன்னகையுடன் நகர வேண்டுமா அல்லது அதற்கு மாற்றமாக கழிய வேண்டுமா என்பதனை எமது உள்ளம்தான் தீர்மானிக்கிறது. அதேபோல, எமது கல்வி வாழ்வு வெற்றி பெற வேண்டுமா அல்லது வெற்றி பெற முடியாமல் அல்லல் அடைய வேண்டுமா என்பதனை தீர்மானிப்பதும் இந்த உள்ளத்தின் ஆரோக்கியம்தான்..!

இன்றைய கல்வியின் பரப்பு மிகவும் அதிகமானது. வரலாறுகள், சமன்பாடுகள், கருத்துக்கள் என அவற்றின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. இந்த கல்விப் பயணத்தில் நாம் வெற்றி பெற வேண்டும் என்றால் சதாவும் எமது உள்ளம் ஆரோக்கியமாகவும் மகிழ்வாகவும் இருக்க வேண்டும்.!

கவலைகள், எமது தோல்விகள் பற்றிய நினைவுகள், அடுத்தவர்கள் பற்றிய தப்பபிப்பிராயங்கள், வேண்டத்தகாத சிந்தனைகள் போன்றவற்றால் மாத்திரம் நிறைக்க எமது உள்ளம் ஒன்றும் குப்பைத் தொட்டியல்ல... அது சதாவும் புன்னகையும் அமைதியும் பூரண திருப்தியும் நிறைந்திருக்க வேண்டிய நந்தவனம்...!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலரை கவனித்துப் பாருங்கள்...! சதாவும் சிடுசிடுவென கோபத்துடன் அலைவார்கள். அடிக்கடி முரண்பட்டுக் கொள்வார்கள். அல்லது, வாழ்வே வெறுத்ததுபோல இருட்டு மூலையிலோ, தனிமையிலோ உட்கார்ந்து விம்மிக் கொண்டிருப்பார்கள். தனது கவலைகளுக்கு அடுத்தவர்களே காரணம் என முறைப்பட்டுக் கொள்வார்கள்.

இவை எமது உள்ளம் ஆரோக்கியமாக இல்லை என்பதற்கான அடையாளங்களாகும். இதே நிலை தொடர்ந்து நீடிப்பதாக இருப்பின் ஏகப்பட்ட சிக்கல்களுக்கு நாம் முகம் கொடுக்க நேரிடும்.

சரி! கல்வி வாழ்வை வளப்படுத்தவும் வீணான கவலைகளை விட்டு உள்ளத்தை பாதுகாக்கவும் மெல்லிய புன்முறுவலுடனும் தன்னம்பிக்கையுடனும் தலைநிமிர்ந்து வாழவும் சில யுக்திகளை இங்கு முன்வைக்கிறோம். முடியுமான அளவு அவற்றை வாழ்வில் எடுத்து நடக்க முயலுங்கள்!

**01. உங்கள் வாழ்வின் பாங்கை இடைக்கிடை மாற்றிக் கொள்ளுங்கள்.**

ஒரு செக்கு மாட்டின் வாழ்க்கைக்கு நாம் பழக்கப்பட்டுள்ளோம். ஒரே மாதிரியான வாழ்க்கை முறை எம்மைக் கட்டிப் போட்டிருக்கிறது. இந்த திறந்த வெளிச் சிறையில் இருந்து வெளியே வருவோம். வாழ்விற்கு கொஞ்சம் புது வர்ணம் பூசுவோம். சின்னச் சின்ன மாற்றங்களால் வாழ்வின் புன்னகைக்கு இசையால் மகுடம் அணிவிப்போம்.!

வழமையாக நடக்கும் பாதையை விட புதுப் பாதையொன்றைத் தெரிவு செய்யுங்கள்! இல்லது அறையின் ஒழுங்கை சற்று மாற்றுங்கள். புதிய நண்பர்களை தேடிக் கொள்ளுங்கள்! அபூர்வ தலைப்பிலான நூலொன்றை வாசிக்கத் துவங்குங்கள் அல்லது நீங்களே நூலொன்றை எழுதத் துவங்குங்கள்!

உங்களை உற்சாகமூட்டும் சின்னச் சின்ன விடயங்களால் அடிக்கடி உங்கள் வாழ்வை புதுப்பித்து கொள்ளுங்கள்!

**02. உடல் ஆரோக்கியம்**

உள்ளத்தின் ஆரோக்கியத்திற்கு உடலின் ஆரோக்கியம் இன்றியமையாதது. போசணை சக்தி கொண்ட உணவுகள், தூய வளி, சுத்தமான குடிநீர், தேவையான அளவு ஓய்வு என்பன எமது ஆரோக்கியத்திற்கு அவசியமான காரணிகளாக மாறுகின்றன.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என உடல் ஆராக்கியத்தைப் பற்றி பேசும்போது எமது முன்னோர்கள் அடிக்கடி முணுமுணுப்பார்கள். அதேபோல, உடல் ஆரோக்கியத்தை கவனித்தால்தான் உள ஆரோக்கியத்தையும் பேணலாம்.

**03. மூளையைத் தூண்டும் செயல்கள்**

அடிக்கடி எம்மூளைக்கு வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு மாறாக, இதனை வேலை செய்யவிடாமல் பொத்திப் பொத்தி வைக்கும்போது அது பயங்கர சோம்பலுக்கு பழகி விடும்! அதன் பின் ஆபத்தான நேரங்களில் கூட நமக்கு உதவாமல் கைவிட்டு விடும்.

புதிர் கேள்விகள், கணக்குகள், பொது அறிவு என அடிக்கடி மூளைக்கு பயிற்சி கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். கருத்துச் செறிவுள்ள நூல்களும் எமது மூளையைத் தூண்டி விசாலப்படுத்தும் வல்லமை கொண்டவை.

**04. ஐம்பெரும் நற்பண்புகளைக் கடைப்பிடியுங்கள்**

பொருட்களில் நேர்த்தி, நேரத்தை செலவிடுவதில் பொருத்தமான ஒழுங்கு, செயல்களில் நிதானம், அனைத்து விடயங்களிலும் பொறுமை, அனைத்தையம் முன்கூட்டியே திட்டமிடல் என உங்கள் வாழ்வை கட்டமைத்துக் கொள்ளுங்கள்.

இவை போன்று அளவற்ற அருளாளனுடனான தொடர்புகளும் எம் உள்ளத்தை செழுமைப்படுத்தும். உன்னத நிதானத்துடன் நந்தவனமாக மலர காரணமாக அமையும். உள்ளத்தின் மத்தியில் ஏகன் மீதான அன்பைக் கட்டியெழுப்பும்போது ஒட்டுமொத்த உள்ளமும் நந்தவனமாக மாறி விடுகிறது.

எம்மை நேசிக்க ஒருவன் இருக்கிறான். சதாவும் அவன் எம்மை கண்காணித்துக் கொண்டிருக்கிறான். எம் மீது அளவற்ற அருள் சொரிகிறான் போன்ற எண்ணங்கள் உள்ளத்தை உரப்படுத்தி வளமூட்டும். கல்வி வாழ்வை மட்டுமின்றி உலக வாழ்வையும் நாம் வெற்றி கொள்ளலாம்.

உள்ளத்தில் ஒரு நந்தவனத்தை உருவாக்குவோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விரைவு - உயர்வு - துணிவு

## எட்டாயிரத்தைத் தாண்டியவர்

எவரெஸ்டை முதலில் அடைந்த இந்தியப் பெண்மணி பச்சேந்திரிபால் ஆவார். தனியாக எவரெஸ்ட் சிகரத்தை முதலில் அடைந்தவர் பிரான்ஸ் ஒபுரக் என்பவர். 1978 இல் இந்தச் சாதனையைச் செய்த இவர், ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்தவர்.

முதலில் எவரெஸ்டை அடைந்தவர்கள் டென்சிங் நார்கோவும் எட்மண்ட் ஹிலாரியும் என்பதும் நமக்குத் தெரியும். இருமுறை எவரெஸ்டை அடைந்தவர் ஷெர்பா நவாங் கோம்பு என்பவர். இவர் 1963 மற்றும் 1965 ஆகிய வருடங்களில் இந்த சாதனையைச் செய்தார்.

எட்டாயிரம் மீற்றரை விட அதிக உயரம் கொண்ட உலகின் அனைத்து சிகரங்களையும் எட்டியவர் என்ற பெருமை ரெயின்ஹோல்ட் மெஸ்னர் என்பவரையே சாரும்.

## 2020 ஒலிம்பிக்கில் புதிய ஐந்து விளையாட்டுக்கள்

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு ஜப்பானியத் தலைநகரான டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் ஐந்து புதிய விளையாட்டுகளைச் சேர்க்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஸ்கேட் போர்டிங், சர்ஃபிங், பேஸ்பால், ஸ்போர்ட் கிளைம்பிங் மற்றும் கராத்தே ஆகியவை அந்த ஒலிம்பிக் போட்டியில் இடம்பெறக் கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் ஏற்கனவே இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள 18 விளையாட்டுக்களுக்கு அப்பாற்பட்டு இந்த ஐந்து விளையாட்டுக்களும் இப்போது பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனினும், இந்த ஐந்து போட்டிகள் குறித்த இறுதி முடிவு அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரியோ டி ஜெனீரோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியின் போது எடுக்கப்படும்.

## அவுஸ்திரேலியாவுடனான சுற்றுப் போட்டியுடன் டில்ஷான் ஓய்வு




இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவரும் சிரேஷ்ட துடுப்பாட்ட வீரருமான டில்ஷான் ஆஸியுடனான கிரிக்கட் சுற்றுப் போட்டியுடன் தனது ஓய்வை அறிவித்துள்ளார். சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்தும் இருபதுக்கு இருபது போட்டிகளில் இருந்தும் தற்போது விடைபெற்றுள்ள டில்ஷான் ஏற்கனவே சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இருந்து தனது ஓய்வை அறிவித்திருந்தார். இறுதிப் போட்டியில் துடுப்பாட்டத்தில் அவரால் பிரகாசிக்க முடியாவிட்டாலும் பந்து வீச்சில் இரண்டு விக்கட்களை அவர் கைப்பற்றியிருந்தார்.

## இந்திய அணியின் 500 ஆவது டெஸ்ட் போட்டி




இந்தியா-நியூஸிலாந்து அணிகள் இடையிலான கடந்த மாதம் நடந்த டெஸ்ட் போட்டித் தொடர் இந்திய அணியின் 500 ஆவது டெஸ்ட் போட்டியாக பதிவாகியது. 1932 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட் பயணத்தைத் தொடங்கிய இந்திய அணி தனது 84 ஆண்டு கால டெஸ்ட் வரலாற்றைக் கடந்திருக்கிறது. தனது முதலாவது டெஸ்ட் போட்டியை இங்கிலாந்து அணிக்கு எதிராகவே இது விளையாடியது. இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, மேற்கு இந்திய அணி என்பன ஏற்கனவே இந்த மைல்கல்லை கடந்துள்ளன. இந்திய அணியில் இதுவரை 285 வீரர்கள் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடி இருக்கிறார்கள். இதில் 32 பேர் அணித் தலைவர் பதவியையும் அலங்கரித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரியோ பரா ஒலிம்பிக்கில் இலங்கைக்கு பதக்கம்




பரா ஒலிம்பிக் வரலாற்றில் இலங்கைக்கு இரண்டாவது பதக்கத்தை தினேஷ் பிரியந்த ஹேரத் பெற்றுக் கொடுத்துள்ளார். ஈட்டி எறிதல் நிகழ்விலேயே தனது அசத்தல் முயற்சி மூலம் வெண்கலப் பதக்கத்தை இவர் பெற்றுள்ளார்.

பரா ஒலிம்பிக்கின் முதலாவது பதக்கம் 2012 ஆம் ஆண்டு லண்டன் பரா ஒலிம்பிக்கின் 400 m ஓட்டப் போட்டியில் பிரதீப் சஞ்ஜய மூன்றாம் இடத்தைப் பெற்றதன் மூலம் இலங்கைக்கு கிடைத்திருந்தது.

## அவுஸ்திரேலியாவின் சாதனை


Australia Set New World Record 263 Runs

இலங்கை அணிக்கு எதிராக கண்டி பலேகல மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலிய அணி தமது இருபது ஓவர்களில் மூன்று விக்கெட்டுகள் இழப்புக்கு 263 ஓட்டங்களை எடுத்து இந்தச் சாதனையை படைத்துள்ளது.இதற்கு முன்னர் கென்ய அணிக்கு எதிராக இலங்கை அணி ஒரு போட்டியில் பெற்றிருந்த 260 ஓட்டங்களே டி 20 சாதனையாக இருந்தது. சிறப்பாக ஆடிய கிளென் மேக்ஸ்வெல் 65 பந்துகளில் 145 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். சில நாட்களுக்கு முன்னர்தான் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக இங்கிலாந்து அணி 444 ஓட்டங்களை எடுத்து சாதனை படைத்தது. அவ்வகையிலான போட்டியிலும் முந்தைய சாதனை இலங்கை அணியின் பெயரிலேயே இருந்தது.

## பாரா ஒலிம்பிக்கில் சீனா முதலிடம்



மாற்றுத் திறனாளிகளுக்கான 15 ஆவது பாரா ஒலிம்பிக் போட்டி பிரேசிலின் ரியோ டி ஜெனீரோ நகரில் கடந்த மாதம் 7-18 ஆம் திகதி வரையில் நடந்தது. இதில் 159 நாடுகளைச் சேர்ந்த 4,342 வீர வீராங்கனைகள் பங்கேற்றனர். முதல் நாளில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய சீனா பதக்கப் பட்டியலில் 107 தங்கம், 81 வெள்ளி, 51 வெண்கலம் என்று மொத்தம் 239 பதக்கங்களுடன் முதலிடத்தை இது தட்டிச் சென்றது. இங்கிலாந்து (64 தங்கங்கள் உட்பட 147 பதக்கங்கள்) 2 ஆவது இடமும், உக்ரைன் (41 தங்கங்கள் உட்பட 117 பதக்கங்கள்) 3 ஆவது இடமும், அமெரிக்கா (40 தங்கங்கள் உட்பட 115 பதக்கங்கள்) 4 ஆவது இடமும் பெற்றன. இந்தியா இரண்டு தங்கங்கள், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என்று 4 பதக்கங்களுடன் 43 ஆவது இடத்தை பிடித்தது. இலங்கை ஒரு வெண்கலப் பதக்கத்துடன் 76 ஆவது இடத்தைப் பிடித்துக் கொண்டது.

## ரொனால்டோவிற்கு விருது



ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பின் சிறந்த வீரருக்கான விருது இவ்வருடம் கிறிஸ்டியானோ ரொனால்டோவிற்கு வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# என் உம்மா



அன்பின் திருவுருவே
கருணையின் மறுவடிவே
அகிலத்தின் இருப்புக்கே
ஆதாரம் நீயும்மா

வருத்தித்தான் ஈன்றெடுத்தாய்
உன் மகளை
வளம் சேர வளர்த்து விட்டாய்
வாழ வழிகாட்டி விட்டாய் - உன்
வாழ்வை அர்ப்பணித்தாய்

சான்றோனாய் உன் மகளை
காண்பதற்கு கனவு கண்டாய்
நாள் தோறும் தொழுகையிலே
இரு கரங்கள் ஏந்தி நின்றாய்

பசி தாகம் நீ மறந்தாய்
தூக்கத்தை நீ துறந்தாய்
கண்மணியாய் நினைத்தே
கருத்தோடு என்னை வளர்த்தாய்

வெள்ளை மனம் கொண்டவளே
பிள்ளை மனம் வென்றவளே
உன் கடனை தீர்ப்பதற்கு
என்ன செய்வேன் என் தாயே!

தோள் சுமந்து பூமியிலே
சுற்றிச் சுற்றி வந்தாலும்
வானளவு செல்வமதை
வாரி நான் தந்தாலும்...

பெற்ற கடன் தீர்ப்பதற்கு
உற்ற வழி ஏதுமுண்டோ?
கற்றவர்கள் சொல்லவில்லை
கேள்விக்கொரு பதிலுமில்லை


பெற்றவளே என் தாயே!
மூச்சிருக்கும் நிமிடம் வரை
உன் நினைவுகளை மீட்டி
உனக்காக கையேந்தும்
உன் மகளாய்
வாழ்ந்திருப்பேன்

✎ **பாத்திமா பர்ஹா பாரூக்**
**மே/மா/மது/பலாந்தை மு.வி.**

# நண்பனே உனக்காக!

வாழ்க்கை எனும் வட்டத்தினுள்
வாழ்நாளை தொலைத்த நண்பா!
ஏன் இன்னும் உன் வாழ்வை மாற்றவில்லை!
மரணம் ஒரு நாள் வரும் - நீயும்
மறைந்துதான் ஆக வேண்டும்
மண்ணோடு மண்ணாகும்
இந்த மாய உலகில்
மாற்றங்களுக்கும் மாயங்களுக்கும் மயங்குவதேன்
என் நண்பா!
நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று
நன்மையும் தீமையும் ஒன்றாயிருக்க
நல்லதை விட்டு விரண்டோடுகிறாய்...
நாளைய மறுமை நினைவில்லையா...?
நிஜமாய் வருவதும் அதுதான் நண்பா!
காலம் கடிகாரம்போல சுழல
கருணை நண்பா
நீ வருவாய்!
காத்திரமான கண்களுடன்
காத்தமுன் நபி வழி சென்று
கச்சிதமாய் வாழ் நண்பா...!
சரித்திரத்தின் இப்போர்க்களத்தில்
சத்தியத்தின் போதனையைக் கொண்டு
சாந்தமாய்க் கற்று
சாதனை படைத்த
சான்றோராய் வாழ் நண்பா!

✎ **எம்.எம்.எப். நுஸ்ரத்**
**கிரி/அறக்கியாள மு.ம.வி**



## பேசும் கவிதை - இல 18



- ✎ படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- ✎ கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- ✎ எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- ✎ கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 ஒக்டோபர் 20**

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,**
**கொழும்பு 09**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்



### முதலிடம் பெற்ற கவிதை

## பாக்கியம்

தூய்மையின் பிறப்பிடமாய்
தூதுவரின் வழிகாட்டலில்
இஹ்ராம் எனும்
ஆடையணிந்து
இறைஞ்சும் ஹாஜிகளே...
பலகோடி மக்களுடன்
படைத்தவன் அவனை
ஒன்றாக சேர்ந்து
ஒருமித்தே புகழுரைக்கும்
பாக்கியம் பெற்றனீரே...

✍ ருமைஸா
பம்மன்ன

## இறுதிக் கடமை

மஹ்ஷர் நினைவை மக்கா மண்ணில்
உணர்ந்திடும் தியாகப் பயணம்
ஒரே மறை, ஒரே இறை, ஒரே மனம்
என உணர்ந்திடும் இறுதிக் கடமை
கஃபாவைச் சுற்றி வலம் வருதலும்
கையேந்திப் பிரார்த்திப்பதும்
பாவமன்னிப்பு தேடுவதும்
இறை நம்பிக்கையின் உச்சம்
இறுதிக் கடமையின் அர்த்தமும் அதுவே

✍ ஏ.எஸ்.எப். ரீஸ்லா
பொலன்னறுவை

## ஹஜ்

தியாகத்திருநாளில்
இப்ராஹிம் மாநபியை
நினைவுகூறவே
இறுதிக் கடமை முடித்திடவே
அல்லாஹ்வின் பரிசு
சுவனத்தை பெற்றிட
பண்பாய் செல்ல நாமும்
லப்பைக்
அல்லாஹும்ம லப்பைக் - என்று
முழங்கிடுவோம்

✍ எச்.எஸ். ஷெர்வின்சலா
பு/பாத்திமா பெ.ம.வி.

## மீண்டு(ம்) வந்தேன்

பாவத்தை சுமந்து
பாதாளப் படுகுழிக்குள்
பாவி என்ற நாமம் தாங்கி
பதறித் திறந்த இந்த ஆவி
பாவக் கறைகள் அற்றவனாய்
பரந்த பூமியில் - அன்று
பிறந்த பாலகன்போல்
ஹாஜி என்ற பட்டம் தாங்கி
விரிந்து திரிய
மீண்டு(ம்) வந்தேன்...

✍ எம்.எச்.எப். சுமைலா
தம்பலை, பொலன்னறுவை

## மன்னிப்பு

யா அல்லாஹ்!
இம்மைதானத்திலே
அதிகமானோர் உன்னிடம்
கையேந்தியுள்ளனர்
அதில் நீ மன்னிப்பு
வழங்குபவர்களின் கூட்டத்தில்
எங்களையும் சேர்த்தருள்வாயாக!

சகீரா கைஸ்
மாத்தளை

## உன்னிடம் கேட்கிறேன்!

தீமைகள் பல செய்து
சோதனைகள் பல அனுபவித்து
கவலைகள் வந்து சேர
நன்மை தேடுவதற்காய்
உன்னிடம் பாவமன்னிப்பு
கேட்கின்றேன் இறைவா!!

✍ எம்.ஆர். ஸம்ஹரீரா
அல்ஹிக்மா மு.ம.வி.

## ஹஜ்

கோடிக்கணக்கு
மாந்தரை
தேடிவைக்கும்
யாத்திரை
தேடிவைக்கும்
நன்மையினை
கோடிக்கணக்கு
ஈட்டித் தரும்...

✍ அஸ்மா இக்ராம்
பலந்தை மு.வி.
அகலவத்த

## உருகி வேண்டுவோம்

இறைத்தூதர் எம் நபியும்
இறுதி உரை பகர்ந்த இடம்
பொறுமையுடன் நின்று நாமும்
பிழை பொறுக்க மன்றாடிடுவோம்
இமைகள் கண்ணீர் நனைக்க
இதயம் கசிந்து உருக
இருகரங்கள் ஏந்தி நாமும்
இறைவனிடம் மன்றாடிடுவோம்
பிழை பொறுக்க உருகி வேண்டுவோம்

✍ ஆர்.எம். அஸ்ரித் முஹமட்
பொ/அல் அஸ்ஹர் ம.வி.
கல்லளை, கதுருவெல

## அருள்

பாலைவனக் கொடும்
வெயில் கடந்தும்
பகலவன் உதிர்ந்துபோன
செய்தி தெரிந்தும்
உன் அருள் தேடி
வந்திருக்கின்றேன்
அல்லாஹ்வே!
அருள் பாலிப்பாயாக

✍ ஏ.எப். சம்ஹா
மன்/எருக்கலம்பிட்டி ம.ம.வி.
மன்னார்

## ஹாஜிகளே ஸலாம்...

சாதிபேதம்
ஏதுமின்றி
சாந்தி நபியின்
வழி சென்று
அல்லாஹ்வின்
அருள் பெற்ற
ஹாஜிகளே ஸலாம்

✍ அஹ்மத் மஸாஹிம்
அல்பஹ்ரியா ம.க.
தொட்டவத்தை

## இருகரம் ஏந்துகிறேன்...!

யுத்தகளமாய் நித்தம் மாறும்
பலஸ்தீன மண்ணிலே
சின்னஞ்சிறு பிஞ்சுகளை
கொன்றொழிக்கும்
சிரியா தேசத்திலே
யுத்தம் நீங்கி சாந்தியும்
நித்தமும் மலர
இந்த அரபா திடலிலே!
இருகரம் ஏந்துகிறேன் யா அல்லாஹ்!

✍ ஸைரா பாஇ
ஹேனமுல்ல, பாணந்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்களுடைய இலக்கை அடைந்து கொள்வது எப்படி?

*ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)*
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology

ஒவ்வொரு மாணவனும் தனது இளமைக் காலத்தினுள் பெறுமதியான ஓர் இலக்கை அமைத்து அதனை அடைந்து கொள்வதில்தான் உண்மையான வெற்றி காணப்படுகிறது. இலங்கை போன்ற நாடுகளில் இதற்குச் சாதகமான சந்தர்ப்பங்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. எனினும், ஒரு சில வீண் வேடிக்கைகள், கேளிக்கைகளால் எமது மாணவர்கள் தமது இலக்கை விட்டும் திசை திருப்பப்படுவதுதான் கவலையளிக்கின்றது.

கடந்த கால அகரங்களில் இலக்கு ஒன்றைத் தீர்மானிப்பதன் முக்கியத்துவம், இலக்கைத் தீர்மானிக்கும் வழிமுறைகள் தொடர்பில் நிறையவே கலந்துரையாடியுள்ளோம். கடந்த இதழிலும் கூட படிப்பதற்கு ஆசையாக இருந்தும் படிக்க முடியாமல் இருப்பவர்கள் என்ன செய்யலாம் என்ற விடயங்களைப் பேசினோம்.

இந்த இதழில் எமது வாழ்நாளில் நாம் என்ன வகையான இலக்குகளைக் கொண்டிருந்தாலும் அவற்றை அடைந்து கொள்வதற்கான இலகுவான வழிமுறை என்ன என்பது தொடர்பாகப் பேசவுள்ளோம்.

அன்புக்குரிய மாணவர்களே! எமக்கு முன்னால் உள்ள காலம் மிகச் சொற்பமானதே. அவற்றைத் தனக்கும் தனது சமூகத்துக்கும் நாட்டுக்கும் இந்த உலகம் மற்றும் மறுமை வாழ்வுக்கும் பிரயோசனமளிக்கும் வகையில் பயன்படுத்த நாம் கற்றுக் கொள்வது அவசியம். அந்த வகையில், நாம் பேச முயற்சிக்கும் விடயங்களை அவதானமாக வாசித்து விளங்கி வாழ்வில் அமுல்படுத்த நீங்கள் முயற்சிக்கத் தவறாதீர்கள்.

**இலக்கை அடைந்து கொள்ள அவசியமான 05 விடயங்கள்:**

01. **உணர்வுபூர்வமான ஓர் இலக்கில் நிலைத்திருங்கள்**
(Hold on to a Conscious Goal)

இலக்கைத் தீர்மானிப்பதிலுள்ள மிக முக்கியமான விடயம்தான் சாதிக்க விரும்பும் விடயம் அல்லது எனக்குத் தேவையான விடயம் எது என்பதை மிகத் தெளிவாக அறிந்து அதைத் தனது இலக்காக ஆக்கிக் கொள்வதாகும். தனது இலக்குத் தொடர்பில் தனக்குத் தெளிவு இருக்க வேண்டும். தனது குறிக்கோளில் தனக்கிருக்கும் தெளிவு என்பது மிகவும் சக்தி வாய்ந்தது; உள்ளத்தை ஒருமுகப்படுத்தவும் சிந்தனை, செயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு அனைத்தையும் குவி மையப்படுத்தவும் தனது இலக்கு பற்றிய தெளிவு மிக முக்கியம் வாய்ந்தது.

தான் சாதிக்க விரும்பும் விடயம் இதுதான் என்ற தெளிவோடு நீங்கள் தீர்மானித்த ஓர் இலக்கில் என்றும் நிலைத்திருங்கள். நிச்சயம் அந்த இலக்கை இலகுவாக அடைந்து கொள்ளலாம். ஆனால், இன்றுள்ள மாணவர்களின் பிரச்சினை என்னவெனில், அடிக்கடி தமது இலக்கை மாற்றிக் கொள்வதாகும். இன்றைக்கு ஓர் இலக்கு, நாளைக்கு வேறு ஓர் இலக்கு, அடுத்த நாள் நண்பன் சாதிக்க விரும்புவதைத் தானும் சாதிக்க வேண்டும் என்று விரும்புவது. இவ்வாறு பெற்றோரின் விருப்பம், அயலவன் விருப்பம், பெற்றோரின் நண்பர்களின் விருப்பம், சினிமாப் படங்களில் வரும் ஹீரோ, ஹீரோயினியின் விருப்பம் போன்ற அடுத்தவர்களின் விருப்பங்களைத் தனது விருப்பமாகக் கருதி அவற்றை அடைய வேண்டும் என்று முயற்சிக்கின்றனர்.

கல்வித் துறையில், விளையாட்டுத் துறையில், எழுத்துத் துறையில், கலைத் துறையில் தான் சாதிக்க வேண்டும் என்று இலக்கு வைக்கும் மாணவர்கள் காலப்போக்கில் காதல், கைத்தொலைபேசி, வீடியோ கேம், லெப்டொப், போதைப் பொருள், சினிமா, நாடகம் என சின்னச் சின்ன விடயங்களுக்காக தமது குறிக்கோளை மாற்றிக் கொள்கின்றனர்.

நல்ல கெட்டித்தனமான மாணவர்கள் கூட தனது இயலுமை, ஆளுமை, விருப்பு, வெறுப்பு என்பவற்றுக்கேற்ப பொருத்தமான ஒரு குறிக்கோளை அமைத்து அதில் உறுதியாக இருப்பதை விடுத்து தனது நண்பர்களுக்காகவும் பெற்றோர் உறவினர்கள், ஆசிரியர்களுக்காகவும் தமது குறிக்கோளை அடிக்கடி மாற்றிக் கொள்கின்றனர். இவ்வாறு குறிக்கோளை மாற்றுவதற்கு மிக முக்கியமான காரணம் சுய நம்பிக்கை இல்லாமையாகும்.

எவ்வாறாயினும், நீங்கள் தீர்மானித்த ஒரு குறிக்கோளை இலகுவாக அடைய வேண்டும் என்றால் நீங்கள் அந்த இலக்கில் நிலைத்திருக்க வேண்டும். அடிக்கடி இலக்கை மாற்றிக் கொள்ளாமல் இலக்கை அடையும் வழிமுறைகளையும் யுக்திகளையும் மாற்றிக் கொள்ளுங்கள்.

02. வழமைக்கு மாற்றமான, வித்தியாசமான ஞாபகமூட்டும் வழிமுறைகளை ஏற்படுத்துங்கள்.
(Set an Unusual Reminder)

நீங்கள் தீர்மானித்த இலக்கில் நிலைத்து நிற்கவும் தொடர்ச்சியாக அந்த இலக்கை நோக்கிப் பயணிக்கவும் செய்ய வேண்டிய அடுத்த விடயம் உங்களுடைய இலக்கை சதாவும் ஞாபகப்படுத்தும் வழிமுறைகளை ஏற்படுத்திக் கொள்வதாகும். உதாரணமாக:

1. உங்களது இலக்கை ஞாபகப்படுத்தும் அடையாளப் பதாகைகளைக் காட்சிப்படுத்தல். இது உங்களை எந்த நேரமும் தொந்தரவு செய்யும் வகையில் அமைத்துக் கொள்ளுங்கள். க.பொ.த. (சா/த) பரீட்சையில் நீங்கள் 9 A பெறுவதுதான் உங்கள் இலக்கு எனில், அதை ஞாபகப்படுத்தும் பதாகைகளைத் தயாரித்து வீட்டில் கண்ணுக்குப் புலப்படும்படியான இடங்களில் காட்சிப்படுத்தலாம்.
2. குளியலறை, கழிப்பறைகளில் கண்டதை எல்லாம் எழுதி அசிங்கப்படுத்துவதை விட, உங்களுடைய குறிக்கோளை எழுதி விடலாம்.
3. உங்களுடைய கணினி, கைத்தொலைபேசி போன்றவற்றின் Wall Paper ஆக உங்களுடைய இலக்கை அமைத்துக் கொள்ளலாம்.
4. பேஸ்புக், வட்ஸ்அப் போன்றவற்றின் Profile Picture ஆக உமது இலக்கை ஆக்கிக் கொள்ளலாம்.

இவ்வாறு வித்தியாசமான முறையில் உங்களுடைய இலக்கை உங்களுக்கு ஞாபகமூட்டும் வழிமுறைகளைக் கையாண்டு சுமார் 60 நாட்களுக்குக் குறையாமல் செயன்முறைப்படுத்துங்கள். மகிழ்ச்சிகரமாக உங்களுடைய இலக்குக்கு நீங்கள் இசைவாக்கம் அடைவீர்கள். உளவியலில் இதை (Hedonic Adaptation) என்று அழைப்பர்.

03. நான் எதை, எப்போது செய்வேன் என்பதை வரையறை செய்து கொள்ளுங்கள்
(I will do, What, by When)

உங்களது குறிக்கோளை அடைவதற்கான கால வரையறை ஒன்றைத் (Time Line) திட்டமிட்டுக் கொள்ளுங்கள். பிரதான இலக்கை அடைவதற்குத் தேவையான முக்கியமான சிறிய சிறிய இலக்குகள் காணப்படும். அவற்றை இனங்கண்டு அவற்றை எப்போது செய்து முடிக்க வேண்டும் என்பதை வரையறை செய்து எழுதிக் கொள்ளுங்கள். அதற்கிணங்க செய்ய வேண்டிய வேலைகளையும் செய்து முடிக்கும் காலங்களையும் இணைத்து ஒரு அட்டவணையைத் தயாரித்துக் கொள்ளலாம்.

உதாரணமாக: எதிர்வரும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் நீங்கள் 9 A பெறுவதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேரம் 45 நிமிடம்


வினாப்பத்திரம் I



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்


முதல் உருவிற்கு சமமான உருவைத் தெரிவு செய்க.

1.



i. ii. iii.

2.



i. ii. iii.


அடைப்புக்குள் இருக்கும் இரு கோலங்களையும் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

3.




i. ii. iii.

4.



i. ii. iii.

5. கீழுள்ள உருவில் எத்தனை முக்கோணிகள் உள்ளன?



i. 6
ii. 8
iii. 5

6. இரட்டை எண்கள் மாத்திரம் அமைந்துள்ள விடையினை தெரிவு செய்க.

i. 7, 8, 9, 10
ii. 30, 45, 73, 48
iii. 30, 78, 46, 70

□+△=8 எனவும் △-○=3 எனவும் தரப்பட்டுள்ளன.


7. ○ இற்கு பொருத்தமான எண் யாது?

i. 4 ii. 2 iii. 1

8. △+○ இற்கு பொருத்தமான பெறுமானம் யாது?

i. 5 ii. 7 iii. 4

9. தனது உடலை நாவினால் நக்கி சுத்தப்படுத்தும் பிராணியைத் தெரிவு செய்க.



i. ii. iii.

10. நுளம்பினால் பரவும் நோய் அல்லாதது எது?

i. டெங்குக் காய்ச்சல்
ii. நெருப்புக் காய்ச்சல்
iii. மலேரியாக் காய்ச்சல்

11. விற்றமின் A குறைபாட்டால் ஏற்படும் நோய் பின்வருவனவற்றுள் எதுவாகும்.

i. பெரிபெரி ii. ஸ்கேவி
iii. மாலைக்கண்


12. ஒரு சோடா போத்தலில் உள்ள குளிர்பானத்தை 5 பேருக்கு பகிர்ந்தளிக்க முடியுமெனின், 29 பேருக்குக் கொடுப்பதற்கு எத்தனை குளிர்பான போத்தல்கள் தேவை?

i. 6 ii. 7 iii. 5

13. 4 அப்பிள்களின் விலை ரூ. 60.00 எனின், 3 அப்பிள்களின் விலை யாது?

i. ரூபா. 30.00 ii. ரூபா. 60.00
iii. ரூபா. 45.00

14. உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்?



i. 2/6
ii. 5/6
iii. 4/6

15. 1736 இல் இலக்கம் 7 இன் பெறுமானம் யாது?

i. நூறுகள் ii. 70 iii. 700

16. கீழுள்ள சதுரத்தின் சுற்றளவைக் காண்க.



9 cm

i. 38 cm
ii. 36 cm
iii. 49 cm

17. Cool என்பது Looc எனின் Pool என்பது?

i. Polo ii. Lool
iii. Loop





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. 7, 9, 12, 16, ..... இவ்வெண்கோலத்தில் அடுத்து வர வேண்டிய இரு எண்களும் முறையே

i. 27, 21 ii. 20, 24 iii. 21, 27

19. இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ பார்க்கும்போது ஒரே கருத்தைத் தரும் சொல்?

i. DOT ii. LEVEL

iii. CABEL

20. 15 இவ்வெண்ணை உரோமன் இலக்கத்தில் எழுதுவதற்கு தேவையான ஈர்க்குகளின் எண்ணிக்கை?

i. 5 ii. 8 iii. 3

21. இலங்கையின் தேசியக் கொடியில் காணக் கிடைக்காத நிறம் எது?

i. பச்சை ii. மஞ்சள் iii. நீலம்

22. பின்வருவனவற்றுள் ஊனுண்ணி அல்லாதது எது?

i. கழுகு ii. பூனை

iii. சிங்கம்

23. என்னிடம் ரூபா 200 உம் எனது தம்பியிடம் ரூபா 100 வும் உள்ளன. நான் எவ்வளவு பணத்தினை தம்பிக்குக் கொடுத்தால் இவரிடமும் உள்ள பணம் சமனாகும்.

i. ரூபா. 25.00 ii. ரூபா. 100.00

iii. ரூபா. 50.00

24. 

இது ஒரு

i. செங்கோணமாகும்

ii. விரிகோணமாகும்

iii. கூர்கோணமாகும்

25.
```
  3 [A] 2
  2  4 [B]
  -------
  5  7  7
```
A, B என்பவற்றுக்கு பொருத்தமான எண்கள் முறையே

i. 4, 3 ii. 3, 5 iii. 5, 3

26. பலாவித்து, கௌபி, பாசிப்பயறு, மாவித்து, கடுகு என்பனவற்றை பருமன் அடிப்படையில் ஒழுங்குபடுத்தும் போது நடுவில் வருவது எது?

i. பலா வித்து ii. கௌபி

iii. மா வித்து

27. ஒரே நேரத்தில் அதிகமானோர் பயணம் செய்வதற்கு ஏற்ற வாகனம் எது?

i. பேருந்து ii. கார் iii. வேன்

28. புத்தகம் ஒன்றில் எப்போதும் இருப்பது எது?


i. எழுத்துகள் ii. பக்கங்கள்

iii. படங்கள்


29. மரம் ஒன்றில் அதிகம் இருப்பது எது?

i. பூக்கள் ii. பழங்கள்

iii. இலைகள்

30. 


i. 1 ii. 6 iii. 10

31. 


i. 35 ii. 30 iii. 17

கீழுள்ள இந்து அராபிய இலக்கங்களுக்குப் பொருத்தமான உரோமன் இலக்கங்களைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.

32. 16 i. xiiiv ii. xvi iii. xiv

33. 9 i. viiii ii. xi iii. ix

இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

34. மான்கள் நீரைத் தேடிச் ................

i. சென்றது ii. சென்றனர்

iii. சென்றன

35. விமலா படிப்பில் ஆரவம் மிக்கவளாகக் ................

i. காணப்பட்டது ii. காணப்பட்டார்கள்

iii. காணப்பட்டாள்

முதலில் தரப்பட்ட சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.

36. மாந்தர் i. மிருகம் ii. மக்கள்

iii. வீடு

37. பார் i. காடு ii. மேடு

iii. உலகம்

சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.

38. i. பயிச்சி ii. பயிர்ச்சி

iii. பயிற்சி

44ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

**பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.**

சித்திரை பிறக்குது பார் தம்பி
சின்னக்குயில் கூவுது பார் தம்பி
சிகப்புப் பட்டாடை பார் தம்பி
சிரித்து மகிழ வா தம்பி

1. பாடலில் இடம் பெற்ற காலப் பெயர் ஒன்று?
2. பாடலில் வந்துள்ள உயர்திணை ஆண்பால் சொல்?
3. குயிலின் ஒலி மரபை ஒத்த இன்னுமொரு பறவை?
4. பாடலில் இடம்பெற்ற பெயரும் வினையு மான சொல்?
5. தம்பி என்பதற்கான எதிர்ப்பாற் கருத்து?

**சரியான தொகுதிக்கு கோடிடுக.**

6. i. பாவக்கா, பைத்தங்காய், போயிலை
   ii. பாகற்காய், பயிற்றங்காய், புகையிலை
   iii. பாகட்காய், பையற்றங்காய், போயிலை
7. i. வெந்நீர், பன்னீர், தேநீர்
   ii. வென்னீர், பண்ணீர், தேனீர்
   iii. வெண்நீர், பன்நீர், தேநீர்

**ஒரே கருத்தைத் தராத சொல்லின் கீழ் கோடிடுக.**

8. மாதா, பிதா, அன்னை, தாய்
9. விண், ஆகாயம், வான், இரவி
10. தாமரை, பூ, மலர், புஷ்பம்

**கட்டங்களை பூர்த்தி செய்க.**

11. உயிர் எழுத்துக்களின் தொகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

12. வரவு என்பதன் எதிர்க்கருத்து

| | | |
|---|---|---|
| | | |

13. ஔவையார் எழுதிய நூல்

| | | |
|---|---|---|
| | | |

**பிரித்து எழுதுக.**

14. மணியோசை = .........+.........
15. பனையோலை = ........+.........

'எனது நன்றி உள்ள நாய்' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

1. ..................................................
2. ..................................................
3. ..................................................

**பின்வரும் ஆங்கில சொற்களுக்கான பொருத்தமான எழுத்தை எழுதுக.**

16. El......phant
17. Peac.......ck

**பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினை எழுதுக.**

18. Please go :..........................................
19. Catch it :..........................................

**சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.**

20. தாத்தா எனவா :..................................
21. மட சதுட்டுய் :..................................

**சரியான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

22. 7420 என்பதை சொற்களில் எழுதுக.
23. 640 குடைகளை 5 பேருக்கு சமனாகப் பகிர்ந்த போது
    1. ஒருவருக்கு கிடைக்கும் குடைகளின் எண்ணிக்கை
    2. மீதியாக இருக்கும் குடைகள் எத்தனை?
24. பின்வரும் எண்களை இறங்கு வரிசையில் எழுதுக. 137, 470, 216, 503
25. செவ்வகமொன்றின் ஒரு பக்க நீளம் 9 cm, அகலம் 6 cm எனின் அதன் சுற்றளவு யாது?
26. தரப்பட்ட உருவில் 1/2 ஐ நிழற்றுக.

| | | | |
|---|---|---|---|
| | | | |

27. வகுக்குக. 1. $\sqrt[4]{408}$ 2. $\sqrt[5]{540}$
28. அருகில் காட்டப்பட்டுள்ள இலக்க அட்டை நான்கையும் பயன்படுத்தி ஆக்கக் கூடிய

| | | | |
|---|---|---|---|
| 2 | 7 | 3 | 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1. மிகப் பெரிய எண் யாது?

2. மிகச் சிறிய எண் யாது?

29. 2 *l* 550 *ml* ஐ *ml* இல் தருக.

30. 3 *kg* 500 *g* சீனியை எத்தனை 500 *g* பைக்கற்றுகளில் அடைக்கலாம்?

31.



1. இவ்வுருவில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

2. இவ்வுருவில் உள்ள செங்கோணத்தை விட பெரிய கோணங்கள் எத்தனை?

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

32. சமயத்துடன் தொடர்புடைய மலை பின்வருவனவற்றுள் எது?
   - i. பீதுருதாலகால மலை
   - ii. சிவனொளிபாத மலை
   - iii. நக்கீல்ஸ் மலை
   - iv. கிரிகல் பொத்த

33. சமைக்கும்போது கீரை வகைகளின் போசணையினை பாதுகாக்க செய்ய வேண்டியது.
   - i. அதிக நேரம் சமைத்தல்
   - ii. வெட்டும் முன் கழுவுதல்
   - iii. கழுவாமல் சமைத்தல்
   - iv. மிக மெல்லியதாக வெட்டுதல்

34. தேசிய கொடியில் காணப்படும் அரச இலைகளின் எண்ணிக்கை
   - i. *01* ii. *03* iii. *04* iv. *05*

35. பின்வருவனவற்றுள் ஓரிதழ் பூ
   - i. மல்லிகை ii. கடதாசிப்பூ
   - iii. தென்னம்பூ iv. அந்தூரியம்

36. தொலைந்த அடையாள அட்டை தொடர்பாக முறைப்பாடு செய்ய வேண்டிய இடம்?
   - i. பொலிஸ் நிலையம்
   - ii. கிராம சேவகர் காரியாலயம்
   - iii. நீதிமன்றம்
   - iv. வைத்தியசாலை

37. காதுகளால் மட்டும் தகவல்களை பெற்றுக் கொள்ளும் ஒரு சாதனம் எது?
   - i. தொலைக்காட்சி ii. வானொலி
   - iii. பத்திரிகை iv. இணையம்

38. சிவப்பு நிறக் கண்களை கொண்ட பறவை
   - i. காகம் ii. மைனா
   - iii. குயில் iv. கிளி

39. வருடத்தில் குறிப்பிட்ட காலத்தில் மட்டும் கிடைக்கக் கூடியது?
   - i. தேங்காய் ii. வாழைப்பழம்
   - iii. ரம்புட்டான் iv. அன்னாசி

40. நீரினால் பரவும் நோய் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
   - i. டெங்கு ii. மலேரியா
   - iii. நெருப்புக் காய்ச்சல்
   - iv. யானைக்கால் நோய்

41. பாதங்களைக் கொண்ட பிராணி அல்லாதது.
   - i. அட்டை ii. மட்டைத் தேள்
   - iii. சிங்கம் iv. சிலந்தி

42. விசர் நாய்க்கடியை ஏற்படுத்தும் பிராணி அல்லாதது.
   - i. நாய் ii. பூனை
   - iii. கரப்பான் பூச்சி iv. குரங்கு

43. இந்தியா அமைந்துள்ளது இலங்கைக்கு
   - i. வடக்கில் ii. தெற்கில்
   - iii. கிழக்கில் iv. மேற்கில்

44. கடலுக்கு அண்மையில் அமைந்துள்ள நகரம் அல்லாதது?
   - i. புத்தளம் ii. திருகோணமலை
   - iii. கண்டி iv. காலி

45. கண்ணுக்குப் புலப்படாத சிறிய நுண்ணுயிர்களைப் பார்ப்பதற்கு பயன்படுவது?
   - i. தொலைநோக்கி
   - ii. நுணுக்குக்காட்டி
   - iii. கைவில்லை
   - iv. முகம் பார்க்கும் கண்ணாடி

46. இலங்கையின் தேசிய விளையாட்டு
   - i. கிரிக்கட் ii. எல்லே
   - iii. கரப்பந்து iv. கிட்டிப்புள்

47. மஞ்சள் நிற மரக்கறிகள், பழங்களில் அதிகம் காணப்படுவது
   - i. விற்றமின் C ii. விற்றமின் B
   - iii. விற்றமின் K iv. விற்றமின் A

48. பின்வருவனவற்றுள் ஒரு நீர்வீழ்ச்சி எது?
   - i. வளவ கங்கை ii. துன்ஹிந்த
   - iii. கிரிந்தி ஓயா iv. மாணிக்க கங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. காகத்தின் கூட்டில் முட்டையிடும் பிராணி

i. ஆந்தை ii. வெளவால்
iii. குயில் iv. மைனா

50. பின்வருவனவற்றுள் உணவுக்குப் பயன்படும் பூ

i. மல்லிகை ii. அகத்தி
iii. முள்முருக்கு iv. நாகமலர்

51. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு பயன் படும் ஒரு பிராணி

i. பூனை ii. கிளி iii. நாய் iv. சிங்கம்

52. பின்வரும் தாவர இலைகளில் மிகப் பெரிய இலை

i. கத்தாப்பு ii. முருங்கை
iii. சேம்பு iv. கொடித்தோடை

53. பின்வருவனவற்றுள் நிலத்தில் படரும் கொடி

i. புடோல் ii. மல்லிகை
iii. வற்றாளை iv. வெள்ளரி

54. சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்களை கலப்ப தால் கிடைக்கும் நிறம்

i. செம்மஞ்சள் ii. காவி
iii. ஊதா iv. பச்சை

55. கிரிக்கெட் விளையாட்டில் ஓர் அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை

i. *10* ii. *11* iii. *9* iv. *6*

56. சமைக்காது பச்சையாக உண்ணக் கூடியது

i. கத்தரி ii. பூசணி
iii. உருளைக்கிழங்கு
iv. கரட்

---

**விடைகள்**

1. சித்திரை
2. தம்பி
3. சேவல்
4. பார்
5. தங்கை
6. ii
7. i
8. பிதா
9. இரவி
10. தாமரை
11. 12
12. செலவு
13. மூதுரை
14. மணி+ஓசை
15. பனை+ஓலை
16. e
17. o
18. தயவு செய்து போ
19. அதைப் பிடி
20. அப்பா வருகிறார்
21. எனக்கு மகிழ்ச்சி
22. ஏழாயிரத்து நாநூற்று இருபது
23. i. 128 ii. 0
24. 503, 470, 216, 137
25. 30 cm
26.
27. i. 102 ii. 108
28. i. 7532 ii. 2357
29. 2,550 ml
30. 7
31. i. 0 ii. 2
32. ii
33. ii
34. iii
35. iv
36. i
37. ii
38. ii
39. iii
40. iii
41. i
42. iii
43. i
44. iii
45. ii
46. iii
47. i
48. ii
49. iii
50. ii
51. iii
52. i
53. ii
54. i
55. ii
56. iv

---

**41 ஆம் பக்கத் தொடர்...**

39. i. நாநூறு ii. நானூறு
iii. நான்னூறு

40. i. காப்புறுதி ii. காப்புருதி
iii. கார்ப்புறுதி

**விடைகள்**

1. iii
2. iii
3. iii
4. iii
5. iii
6. iii
7. ii
8. ii
9. ii
10. ii
11. iii
12. i
13. iii
14. iii
15. i
16. ii
17. iii
18. iii
19. ii
20. iii
21. iii
22. ii
23. iii
24. iii
25. ii
26. ii
27. i
28. ii
29. iii
30. i
31. ii
32. ii
33. iii
34. iii
35. iii
36. ii
37. iii
38. iii
39. i
40. i



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 14

**தலைப்பு: தாவரவியற் பூங்கா**

## பரிசில்களை பெறும் சித்திரங்கள்



ஸைனப் ஸருக்
தல்கஸ்பிட்டிய,
அரநாயக்க



எம்.என்.எப். நுஹ்லா
உஸ்வதுல் ஹஸனா ம.வி.
காலி



ருப்ஷானா ரியாஸ்
உஸ்வதுல் ஹஸனா ம.வி.
காலி

## பாராட்டை பெறும் சித்திரங்கள்



எம்.எஸ்.எப். நுஹா
கு/பறகஹதெனிய தே.பா.
குருநாகல்



ஸாகிரா கைஸ்
மா/மின்ஹாஜ் ம.வி.
நிககொள்ள



எம்.என். ஆயீஷா ஸஹானி
க/அல்மனார் தே.பா.
ஹந்தெஸ்ஸ



ஜவாஹிர் உமைர்
தி/மூ/அஸ்ரப் வி.
மூதூர்



எம்.என். ஷைனம்
கு/அன்நூர் ம.க.
பாணகமுவ



எம்.என்.எப். நுஹா
குளி/மடிகே மிதியால ம.க.
குளியாபிடிய




ஏ.எப். அப்லா
மன்/எருக்கலம்பிட்டி ம.ம.வி.
மன்னார்



எம்.கே. அப்ரினா
மன்/எருக்கலம்பட்டி ம.ம.வி.
மன்னார்



எம்.என்.எப். ஹனா
குளி/அல்பலாஹ் ஆ.பா.
மடிகே மிதியால



எஸ்.எப். சம்ஹா
மன்/எருக்கலம்பிட்டி ம.ம.வி.
மன்னார்



என்.எம். ஸமி
அக்/அரசினர் முஸ்லிம் ஆ.பா.
அக்கரைப்பற்று



எம்.ஆர். ஆகிப் அஹமட்
கிரி/மதீனா தேசிய பா.
சியம்பலாகஸ்கொடுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரில் தலைநிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலையம்

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்



அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்

ஒரே கூரையின் கீழ்

தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு மொழிகளில்...

- புனித அல்குர்ஆன்
- அகராதிகள்
- உளவியல்
- தர்ஜமாக்கள்
- கதைப் புத்தகங்கள்
- சமையல் புத்தகங்கள்
- இஸ்லாம்
- அல் ஹதீஸ்
- வரலாறு
- இலக்கியம்
- இலக்கணம்
- கவிதை
- பாடசாலை நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- VCD/ DVD







தினமும் காலை 8.00 மணியிலிருந்து
இரவு 10.00 மணிவரை உங்களுக்காகத் திறந்திருக்கும்...

வெளியீடு மொத்த விற்பனைப் பகுதி:
0115 736098, 0772518641

தபால் மூலம் நூல்களைப் பெற:
011 2684851

புனித அல்குர்ஆன் பிரதிகளை
மொத்தமாகப் பெற: 0773171725

Now Available
Free Home Delivery
(Within City Limits)
Contact: 0115 925 935

eZ Cash
MasterCard
VISA
AMERICAN EXPRESS
Accepted

புதிய நூல்களின் தகவல்கள் அறிய
f<space>ibhbooks எனType செய்து
40404க்கு அனுப்புங்கள்.





77, தெமடகொட வீதி,
கொழும்பு-9

HOTLINE:
0115 925 935


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org